# சைவக்கதிர்



சைவ மகாசபை மாத்தளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவக்கதிர் சஞ்சிகை தொடர்ந்து நல்ல விடயங்களோடு வெளிவந்து மக்கள் மனதில் இடம்பிடிக்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவ மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் அருள் வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

எங்களிடம் தங்களுக்குத் தேவையான நல்லெண்ணெய் மற்றும் எண்ணெய் வகைகளையும் சந்தனம், குங்குமம், விபூதி போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும், பெற்றுக் கொள்ளலாம்.

## டிலான் ரேடிங் கம்பனி

91/14 A, ஐ. டி. எச் வீதி,

மாத்தளை.

தொலைபேசி எண்: 066–31468

## DILAN TRADING COMPANY

DISTRIBUTORS FOR ALL KINDS OF MEDICINAL OIL, OMAM WATER ETC.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# சைவக்கதிர்

ஆசிரியர்

**மாத்தளை கார்த்திகேசு**

சைவ மகா சபை, மாத்தளை.
SAIVA MAHA SABAI, MATALE.

447, பிரதான வீதி,
மாத்தளை.

447, Main Street,
Matale.

விலை ரூபா 20/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவக்கதிர் சஞ்சிகையின் இரண்டாவது இதழ்
மாத்தளை முத்துமாரியம்மன்
தேர்த்திருவிழா சிறப்பிதழாக வெளிவரவுள்ளது.

உங்கள் ஆக்கங்களும் இடம் பெற
விரும்பினால் அனுப்பி வைக்கவும்

சைவமகா சபையினர்,
மாத்தளை.

## கண்ணதாசன்

பெரும்பாலான குடும்பங்களில் வாழ்க்கைத் தோல்வி மறைக்கப்பட்டு, கடமையில் பிறந்துவிட்ட குழந்தைகளுக்காக வாழ்க்கை தள்ளப்பட்டு வருகின்றது.

கங்கையின் தண்ணீருக்குப் புதிய சக்தி இருக்குமானால், காசியில் ஏன் பாவிகள் தோன்றப் போகின்றார்கள்?

தாழ்ந்தவர்கள் தங்களை உயர்வாக எண்ணிக்கொண்டு அதை வெளியேயும் காட்டும் போது, உயர்ந்தவர்களை சிரித்துக்கொண்டே ஒதுக்கிவிடவேண்டும்.

தாய் கலகலப்பாக இருந்தால் தானே குழந்தைகள் ஆனந்தமாக இருக்கும்? எந்தக் குடும்பத்தில் சண்டை சச்சரவு அதிகமாக இருக்கின்றதோ, அந்த வீட்டில் குழந்தைகள் சோர்ந்து மெலிந்து போய்விடும்.

தெய்வம் தொழுக. ஏன்? உடலை வளர்க்க உதவியவர் பெற்றோர். அறிவை வளர்க்க உதவியர் ஆசிரியர். உயிரை வளர்க்க உதவியவர் ஆண்டவன். அவன் அருள் இன்றி இவ்வுலகில் எவ்வுயிரும் வாழ முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



பன்கைமம் எனும் பாத்தனை நகரின் கண்புற்றிடங் கொண்டு
வீற்றிருக்கும்.
உலக மக்களின் அன்னையாகிய ஸ்ரீ முத்துமாரியம்மையின்
திருவடிப்போதுகளில் இவ்விதழைக் காணிக்கையாக
வைக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவக்கதிர்

மலர் 1 | "எம் கடன் பணி செய்து வாழ்வதே" | 2000 மார்கழி – தை

எமது சைவமகா சபையானது 1955ம் ஆண்டு பல இளைஞர்களினால் ஆரம்பிக்கப்பட்டது. அன்று மகாசிவராத்திரியைக் கொண்டாடும் நோக்கத்துடனையே ஆரம்பித்து பல வருடங்களாக மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் பல சிறப்பு நிகழ்ச்சிகளுடன் நான்கு ஜாம பூசையையும் நடத்தி வந்தது. அதன் பரிணாம வளர்ச்சியின் காரணமாக பல அறிஞர்களை இங்கு அழைத்து சொற்பொழிவுகளை நடத்தி உள்ளதுடன் மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்திலும், வாரியபொலை அம்மன் ஆலயத்திலும், பரமகுரு சுவாமி மடத்திலும், சமய வகுப்புகளை நடத்தி வந்துள்ளது. அத்தோடு பரமகுரு சுவாமி மடத்தில் ஒருநூல் நிலையத்தையும் நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது. பொது வேலைகளிலும் தன்பங்கை செலுத்தி வந்தது. இன்று சபையின் பல அங்கத்தவர்கள் வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து வருகின்றனர். சபையின் வளர்ச்சியில் 1983ல் நடைபெற்ற கலவரத்தின் பின் ஒருந் தேக்கநிலை ஏற்பட்டது. சிலகாலம் செயல் இழந்து இருந்தது. ஆனாலும் கடந்த ஐந்து ஆண்டுகளாக மீண்டும் செயற்பட ஆரம்பித்தது. செயல் இழந்திருந்த சபையை மீண்டும் செயற்பட வைத்த பெருமை திரு மகாதேவாவைச் சாரும். கடந்த ஐந்து ஆண்டுகளாகச் சபை கல்வித் துறையில் நாட்டம் காட்டி வந்துள்ளது. பாடசாலை மட்டத்தில் திருக்குறள் போட்டி, சைவசமயப் போட்டிகள் வருடம் தோறும் நடத்தி பரிசுகளையும் பாராட்டுப் பத்திரங்களையும் வழங்கி வருவது யாவரும் அறிந்ததே. கடந்த ஐந்தாண்டு காலமாக சபைக்கு தலைமை தாங்கித் திறம்படக் கட்டுக்கோப்போடு செயல்பட்டவர் திரு. பூ. சபாபதி அவர்கள். அவரைச் சபை மறந்து விடமுடியாது.

சபை அடுத்த படியாக ஒரு காலாண்டு சஞ்சிகையை நடாத்த தீர்மானித்தது. அதுவே இன்று உங்கள் கைகளில் இருக்கும் "சைவக் கதிர் சஞ்சிகை". ஏற்கனவே 1962– 1963–1964ம் ஆண்டுகளில் இரண்டு சைவக்கதிர் சிறப்பு இதழ்கள் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இன்று உங்கள் கையில் தவழும் சைவக் கதிர் தொடர்ந்தும் உங்கள் கைகளுக்கு வருகைதரும். அதனை வாங்கிப் பயன் அடைவதோடு பூரண ஆதரவும் நல்குமாறு வேண்டுகிறேன். சைவக்கதிரில் உங்கள் ஆக்கங்கள் வெளிவர வேண்டும். மாணவர்களிடையே ஆசிரியர்களிடையே எழுத்து ஆர்வத்தை மேம்படுத்தி அறிவை வளர்ப்பதே சைவக்கதிரின் நோக்கம். சமய இலக்கிய கட்டுரைகளை, கவிதைகள், மற்றும் மாணவர் பயன் பட விஞ்ஞானம், பொதுஅறிவு ஆகியவைகளை எழுதி அனுப்புங்கள். உங்களின் ஆக்கங்களை சைவக்கதிர் எதிர்பார்க்கின்றது.

அதிவேகமாக முன்னேறி வரும் விஞ்ஞான உலகத்தில் தரம் குறைந்த ஆக்கங்களும், அவற்றைச் சுமந்து வரும் சஞ்சிகைகளும் மலிந்து வந்திருக்கும் இந்தக் காலகட்டத்தில், எமது இளைஞர்களின் நல்வாழ்விற்கு உறுதுணையான சமூகசீர்திருத்தம் சம்பந்தமான அனைத்து ஆக்கங்களையும் எம் சமய விழுமியங்களைத் தேடித் திரட்டிக் கொடுக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் நம்முடையதே என்ற உண்மையை இச்சஞ்சிகை வெளியீடு புலப்படுத்துமென நம்புகிறோம்.

–ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

மாத்தளை சைவமகா சபையினர் வெளியிட்டுவந்த சைவக்கதிர் சஞ்சிகை சிறு இடைவெளிக்குப் பிறகு மீண்டும் வெளிவர உள்ளதென அறிகிறோம். இன்று பெரும்பாலான மாணவர்கள் பாடநூல்களைத்தவிர, சமய, இலக்கிய மற்றும் பொது அறிவு நூல்களை வாசிப்பது குறைவு என்றே கூறவேண்டும். இதற்குக் காரணம் நேரமின்மை அல்ல, பாடநூல்களைத் தவிர வேறு நூல்களை வாசிக்கும் பழக்கம் இல்லை என்பதே உண்மையான காரணம். பெரிய நூல்களை வாசிக்க நேரம் இல்லையாயினும் தரமான கட்டுரைகளை உள்ளடக்கிய சஞ்சிகைகளையாவது வாசிக்க, மாணவர்கள் பழக வேண்டும்.

சைவக்கதிர், சமயம், இலக்கியம், கவிதை, விஞ்ஞானம், கணிதம் போன்ற பல விடயங்களில் தரமான படைப்புகளை உள்ளடக்கிய காலாண்டு சஞ்சிகையாக வெளிவர உள்ளதென அறிகின்றோம். மாணவர்களும், பெரியவர்களும் இச்சஞ்சிகையை வாங்கி வாசித்துப் பயன்பெறலாம்.

சைவக்கதிர் சஞ்சிகைக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!




சுவாமி ஆத்மானந்தா.
இராமகிருஷ்ண மிஷன்.

நல்லவர் நட்பைப் பொருள் கொடுத்தாவது கொள்ளுக
தீயவர் நட்பைப் பொருள் கொடுத்தாவது தள்ளுக.

—திருவள்ளுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வே. இராதாகிருஷ்ணன், ஜே.பி.யூ.எம்

அமைச்சர்

கைத்தொழில், வர்த்தக வாணிப, சுற்றுலாத்துறை, தோட்ட உள்ளக கட்டமைப்பு, கால்நடை அபிவிருத்தி, இந்து கலாசார அலுவல்கள், கல்வி(தமிழ்), சமூகசேவைகள், புனருத்தாரண அலுவல்கள் அமைச்சு

மத்திய மாகாணசபை.

திகதி 27.11.09

சைவமகாசபை – மாத்தளை.

அன்புடையீர்!

# சைவக்கதிர் சஞ்சிகைக்கான ஆசிச்செய்தி

மலையகத்தில் புராதன நகரங்களில் ஒன்றான மாத்தளையில் சைவம் காத்து வளர்க்கும் சைவ மகாசபையின் தொண்டு யாவரும் அறிந்ததே. இந்திய வம்சாவழி மக்களின் ஆரம்ப வழிபாட்டுத் தலம் மட்டுமல்ல, இன்னோரன்ன விடயங்களுக்காக சரித்திரப்புகழ் வாய்ந்த மாத்தளை நகரில் இவ்வாறான சைவ அமைப்புக்கள் முன்னுதாரணமாக பணியாற்றி வருவது மத்திய மாகாணத்தின் இந்துக்கலாச்சார அமைச்சர் என்ற ரீதியில் எனக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

சைவக்கதிர் மீண்டும் ஒளிபரப்ப வெளிவருவது இந்நாட்டின் இந்துக்கள் அனைவரும் மகிழ்ச்சி கொள்ள வேண்டிய விடயம். மேலும் இச்சஞ்சிகையானது இளைய தலைமுறையினரின் தேவையைப் பூர்த்தி செய்யுமளவிற்கு ஆக்கங்களை தன்னகத்தே தாங்கி வெளிவருவது மேலும் என்னை பூரிப்படையச் செய்கிறது. மத்திய மாகாணத்தின் இந்துக்கலாச்சார அமைச்சர் என்ற பொறுப்பிலும் நான் ஒரு இந்திய வம்சாவழித் தமிழ்க் குடிமகன் என்ற வகையிலும் நான், என்னாலான உதவிகளை மேற்படி சைவமகாசபையின் பணிகளுக்கு நல்கக் காத்திருக்கின்றேன்.

சைவக் கதிர் என்றும் ஒளிபரப்ப எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி வணங்குகிறேன்.



வீ. இராதாகிருஸ்ணன் ஜே.பி. யூ. எம்.

அமைச்சர்

கைத்தொழில், வர்த்தக வாணிப, சுற்றுலாத்துறை, தோட்ட உள்ளக கட்டமைப்பு, கால்நடை அபிவிருத்தி, இந்துக்லாச்சார அலுவல்கள் கல்வி (தமிழ்), சமூக சேவைகள் புனருத்தாரண அமைச்சு

மத்திய மாகாணம்.

தனக்குப் பொருந்தும் செயலையும் அதற்காக அறிய வேண்டியதையும் அறிந்து அதனிடம் நிலைத்து முயல்கிற வருக்கு முடியாதது ஒன்றுமில்லை.

-திருவள்ளுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. மு. சிவஞானம்

(மத்திய மாகாணசபை உறுப்பினர்)

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டது எமது சமயமும் மொழியும். நம் சமயக்குரவர்கள் எங்ஙனம் சமயத்தை வளர்த்து வந்தனர் என்பதை நாம் நன்கு அறிவோம். இன்று சைவ மக்களில் பெரும் பாலோர் சைவசமயம் என்றால் என்ன என்பதே தெரியாது இருக்கின்றனர். வருங்கால எம் சமய மக்கள் சமயத்தில், தமிழ் மொழியில் முதிர்ந்தவர்களாக இருக்கவேண்டுமெனில் இத்தகைய சஞ்சிகைகள் காலத்தின் தேவையாகும்.

“எங்கள்கடன் பணி செய்து வாழ்வதே” என்னும் பெரு நோக்கோடு தமிழ் வாழச் சைவம் வளர ஆக்க வேலைகளை ஊக்கமுடன் சைவ மகாசபையினர் செய்து வருகின்றனர். அதில் நானும் ஒருவன் என்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். நம் நாட்டுத் தேசியக் கல்வித்திட்டத்தில் சமயக் கல்விக்குச் சிறப்பிடம் கொடுக்கப் பட்டுள்ளதை. நான் உளமார வரவேற்கிறேன். ஏனெனில் நம் சைவமாணவர்கள் பள்ளிக்கூடங்களில், கல்லூரிகளில் படித்தாலும் சைவநெறியைக் கற்பதற்கு வாய்ப்புண்டு.

மாத்தளை சைவமகாசபையினரின் அயரா உழைப்பின் பயனாக சைவம் நாளும் வளர்ச்சியடைவதாயிற்று. இன்றைக்கு இச்சபையினர் சமுதாய முன்னேற்றத்திற்கு சஞ்சிகை ஒன்று இன்றியமையாதது எனக் கண்டனர். அதன் விளைவே உங்கள் கையில் இருக்கும் சைவக்கதிர். காரிருள் அகத்தில் நல்ல கதிரொளியாய் மாரிடைத்துயில்வோர் கண்ணில் பாய்ந்து ஒளிவீச வேண்டும். காலமெலாம் மணம் வீசி கருத்திற்கும். காலத்திற்கும் தக்கதாய் புதுமையழகெலாம் பொதிந்து நிற்க வேண்டும். சைவக்கதிரை இருகரம் நீட்டி ஒருமனதுடன் சைவப் பெருமக்கள் வரவேற்பார்கள் என எண்ணுகிறேன்.

இச்சஞ்சிகை வெளிவர ஊக்கத்தோடு உழைத்த சைவக்கதிர் ஆசிரியருக்கும், சைவமகாசபையினர்க்கும், ஏனைய தொண்டருக்கும் எனது வாழ்த்துக்கள்.



அம்பிகை அருள் அனைவருக்கும் ஆகுக
வாழ்க சைவம் !   வளர்க தமிழ் !!

மனத்தூய்மையே நேர்மை. மற்றவை
யெல்லாம் வெறுங் கூச்சல்

–திருவள்ளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை, சைவ மகா சபை வெளியிடும் சைவக்கதிர் என்னும் காலாண்டு சஞ்சிகைக்கு, கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் இந்து விவகாரங்களுக்கான மேலதிகச் செயலாளர் **திரு. நடராஜா பரம் சோதி** அவர்கள் வழங்கியுள்ள......

**ஆசிச் செய்தி**

மாத்களை பக்தி மணம் கமழும் ஊர். அங்கு குடி கொண்டிருக்கும் முத்து மாரியம்மன் மலையக மக்களுக்கு மட்டுமன்றி இலங்கை வாழ் மக்கள் அனைவருக்குமே கருணையும் அருளும் பொழிந்து வருகிறார். வருடந்தோறும் நடைபெறும் உற்சவத்தின் போதும் பஞ்சரத பவனியின் போதும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெறுகின்றனர்.

இங்ஙனம் புகழ் பெற்ற மாத்தளையில் இலக்கியத் துறையிலும் ஆன்மீகத் துறையிலும் சிறந்த படைப்பாளிகள், கவிஞர்கள் முத்திரை பதித்த படைப்புக்கள் பல உருவாகியுள்ளனர்.

இத்தகைய மாத்தளையிலிருந்த தற்போது சைவக்கதிர் எனும் பெயரில் ஓர் ஆன்மீக இதழ் வெளிவருவது அறிந்து நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இந்த இதழ் சமய தத்துவங்களையும் ஆன்மீகக் கட்டுரைகளையும், சிறந்த தகவல்களையும் உள்ளடக்கிய இதழாக வெளிவர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர் குழுவினரை மனமாரப் பாராட்டுகின்றேன். சைவக்கதிர் தவறாது ஒளிபரப்புவதாக!!

**நாட்டை அழிக்கும் அறுவர்.!**

நாயமில்லாத வணிகன்.

நேர்மையற்ற அரசியல் வாதி.

ஒழுக்கமற்ற சீர்திருத்த வாதி.

உண்மையில்லாத எழுத்தாளன்.

கொள்கையில்லாத பேச்சாளன்.

அறிவில்லாத படிப்பாளன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Fax: 682013
Telephones

Director: 682014

General: 095296, 695310, 682015, 682114, 682115, 681033

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Department of Hindu Religious and Cultural Affairs

My No.

Your No.

98, Ward Place

Colombo 7 — 10.12.99

## ஆசிச்செய்தி

*இன்றைய சூழ்நிலையில் நல்ல சமுதாயம் உருவாக வேண்டுமானால் சமய அறிவும், இறை பக்தியும் சமூகத்தில் வளர்க்கப்பட வேண்டியது மிக மிக அவசியமாகும். ஆன்மீக வாழ்வுதான் என்றென்றும் ஆனந்தம் தரும் வாழ்வாகும். ஆன்மீக வாழ்வுக்கு வழிகாட்டும் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் மாத்தளை சைவமகாசபை கடந்த 44 ஆண்டுகளாக இயங்கி வருவது பாராட்டிற்குரியது.*

*இளைய தலைமுறையினரிடையே சமய அறிவினையும், இறை பக்தியையும், ஆன்மீக உணர்வினையும் வளர்க்கும் முகமாக சமயம், இலக்கியம், கவிதை, விஞ்ஞானம், கணிதம் ஆகிய விடயங்களை உள்ளடக்கிய காத்திரமான காலாண்டு சஞ்சிகையாக வெளிவர இருக்கும் சைவக்கதிர் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.*

*சாந்தி நாவுக்கரசன்,*
*பணிப்பாளர்,*
*இந்து சமய அலுவல்கள் திணைக்களம்*



*தூய்மை என்பது அவா இன்மை.*

*-திருவள்ளுவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்
மாத்தளை - இலங்கை
RI MUTHUMARIAMMAN THEVASTHANAM
IATALE - SRI LANKA
el: 066 - 22481, 066 - 22320

ஓம் சக்தி



ශ්‍රී මුත්තුමාරියම්මන් දේවස්ථානය
මාතලේ.

05.12.99

## "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்"

சங்கம் வைத்து தமிழ் வளர்த்தார்கள் மதுரையிலே! சைவ மகா சபை வைத்துச் சைவநெறி வளர்க்கின்றார்கள் மாத்தளை மாநகரிலே!

நாம் உண்டு, நம் தர்மம் உண்டு, அவ்வழியே ஆற்றுவோம். நம் சமூகத்திற்கு நற்றொண்டு என்று 1955ம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட சைவமகா சபையினர், சைவத் தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றனர். இந்து மதம் சோதனைகளைக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்திலும் இவர்களுடைய சேவைகள் சிறப்பாக நடைபெறுவது பெருமகிழ்ச்சிக்குரியதாகும்.

சைவமகாசபையினரின் ஆற்றல் மிக்க முயற்சியின் பிரதிபலிப்பாக மிளிரும் "சைவக்கதிர்" சஞ்சிகை, சமய வளர்ச்சிக்கு அவர்களால் இயன்றவரை பங்களிக்கும் உயரிய நோக்கினை எடுத்து இயம்புகின்றது.

இந்து சமய, பண்பாட்டு, இலக்கியம், மெய்யியல் போன்ற துறைகளில் தரமான ஆக்கங்களை வெளியிட்டு இவ்விதழ் கல்விமான்களுக்கும், மாணவர்களுக்கும், இத்துறையில் ஆர்வமுடையோர்க்கும் பயன்தருவதாய் விளங்கும் என எதிர்பார்க்கின்றேன்.

இச்சஞ்சிகையானது சைவமகாசபையின் அயராத உழைப்பிற்கும் சிறந்த சேவைக்கும் சான்றாக விளங்குவதோடு, இளைய சந்ததியினரிடம் சீரிய சமய சிந்தனைகளை வளர்ப்பதற்கும் ஓர் தூண்டுகோலாக அமையும் என நம்புகின்றேன். "சைவக்கதிர்" சஞ்சிகை ஒரு வற்றாத ஜீவநதியாகப் பாயவேண்டும் என்பதே என் பேரவா. இதிலுள்ள அறம் செறிந்த புதிய கருத்துக்கள் உலகெங்கும் பாய்ந்து எமது மதப் பெருமைதனை மனித மனங்களிலே விதைத்து நாளைய சமுதாய வளர்ச்சிக்குப் பூவாய், காயாய், கனியாய் மாறும் என நம்புவோமாக.

இந்தச் சஞ்சிகை வெளியீடு மென்மேலும் வளர்ச்சி பெற்று பாவவினைகளற்ற இருவினை பயன்தரவல்ல ஒரு மஹா யாகம் செய்கின்ற பலனை தரக்கூடியதாக அமைவதற்கு எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரியம்மாள் அருள் பாலிக்க வேண்டுகின்றேன்.

சைவமகாசபை பல்லாண்டுகள் நிலைத்து நின்று தம் நற்பணிகளைத் தொடர வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

ச. சந்திரசேகரம்
தலைவர்
அறங்காவல் சபை
ஸ்ரீ முத்துமாரியம்மாள் தேவஸ்தானம்,
மாத்தளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

காலாண்டு வெளியீடாக வரவிருக்கும் சைவக்கதிர் சஞ்சிகையின் முதல் இதழ் எவ்வளவோ எதிர்பார்ப்புகளுடன் சின்னஞ் சிறு குழந்தை போல் எமது கைகளில் தவழுகிறது. இதனை வளர்த்தல் பொறுப்பு சைவ மகா சபைக்கு மட்டுமா? இல்லை. தமிழ் பேசும் அனைவருக்கும் உண்டென்பது எனது கருத்து.

சமயம் ஒரு மனிதனை நல்வழியில் நடக்க வழிசெய்யும். இது மட்டும் இக்காலகட்டத்திற்கு போதுமானதல்ல. அவனும் அவனைச் சார்ந்த சமூகமும் அனைத்துத் துறைகளிலும் முன்னேறி, பிறந்த நாட்டுக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

இந்நோக்கில், எமது சைவ சபை, சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் இப்போது கூடிய கவனம் செலுத்துகின்றது. இச் சஞ்சிகையும், இத்திட்டத்தின் ஓர் அங்கமே! சமூகத்தின் மேம்பாட்டுக்கான பயனுள்ள கருத்துக்களை இச் சஞ்சிகை வாயிலாக மக்களுக்கு கொண்டு செல்வதும் அவர்தம் நல் ஆக்கங்களுக்கு ஊக்களிப்பதும் எமது நோக்கமாகும்.

இச் சஞ்சிகை வாயிலாக எமது நோக்கத்திற்காக பாடுபடும் அனைவருக்கும், முக்கியமாக சஞ்சிகை ஆசிரியர் திரு. மாத்தளை கார்த்திகேசு அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளும் வாழ்த்துக்களும்.

இச் சஞ்சிகை தொடர்ந்து வெளிவந்து எமது சமூகத்திற்குத் தனது பங்களிப்பினைச் சிறப்புறச் செய்திட எல்லாம் வல்ல அம்பாளின் அருளை வேண்டுகின்றேன்.



நன்றி !

—பொ. செல்வரத்தினம்,
தலைவர்,
சைவமகாசபை,
மாத்தளை.

மனத்தூய்மையே நேர்மை, மற்றவை
பொய்யார் வெறுங் கூச்சல்.
—திருவள்ளுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் சில வரிகள்...

சைவத்திற்கும், தமிழுக்கும், இளைய தலைமுறையினருக்கும் சிறிதேனும் விடிவுதரச் சைவக்கதிரினின்றும் ஒரு துளி ஒளிக்கதிர் வெளிவருமானால், அது இறைவன் எமக்களித்த இன்னருள் என எண்ணி மகிழும் இவ்வேளையில்,

சுயநலமே பெரிதெனக் கருதும் சிக்கலான இக்காலக் கட்டத்தில் தம் பணி பல இருந்தும் அப்பணி அர்ப்பணித்து எம் நற்பணி செம்மையுறத் தம் பொன்னான பொழுதையும் பொருளையும் இதய பூர்வமாக நல்கிவரும் எம் அங்கத்தவர்கள் அனைவருக்கும் நன்றி நவில்வதில் சுகம் காணுகின்றேன்.

மூன்றரைத் தசாப்தங்களுக்குப் பிறகு சைவக்கதிரை திரும்பவும் உயிர்ப்பித்த பொறுப்பும், பெருமையும் எமது உபதலைவர் கலாபூஷணம் திரு. மாத்தளை கார்த்திகேசு அவர்களையே சாரும்.

காலாண்டுக்கு ஒருமுறை ஒளிரவிருக்கும் சைவக்கதிர் மாதமொருமுறை மிளிர அருள் மிகு அம்பாளின் நல்லருள் வேண்டி மீண்டும் அன்பும் நன்றியும் கூறி விடைபெறும்........

-ஜெ. ஜெய்ஹிந்ராஜ்
செயலாளர்,
சைவமகாசபை,
மாத்தளை.



மனத்தூய்மையே நேர்மை. மற்றவை
யெல்லாம் வெறுங் கூச்சல்.

-திருவள்ளுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பாதையில் சபையின் பங்கு

"எண் என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு"

சைவமகா சபையினர் ஆகிய நாம் எமது நீண்ட வரலாற்றிலே குறிப்பிடத்தக்கதாகக் கடந்த ஐந்து ஆண்டுகளில் திரு. மு. சபாபதி அவர்களின் கட்டுக்கோப்பான தலைமையின் கீழ் செயற்பட ஆரம்பித்தோம். ஒரு வளமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப இளம் தலைமுறையினரின் கல்வி வளர்ச்சியே மிக மிக அவசியம் என்பதை கருத்திற் கொண்டு ஆரம்பத்தில் திருவள்ளுவர் குருபூசையை முன்னிட்டு மாத்தளை மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே வருடந்தோறும் திருக்குறள் மனனம், பேச்சு, கட்டுரை, விவாதம், பண்ணோடு திருமுறை ஓதுதல் போன்ற விடயங்களில் போட்டிப் பரீட்சைகளை நடாத்தி வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கினோம். பங்குபற்றும் பாடசாலைகளினதும், பரீட்சார்த்திகளினதும் தொகை காலக்கிரமத்தில் வெகுவாக அதிகரித்துள்ளமை எம்மை மேலும் உற்சாகப்படுத்துகின்றது. இதன் காரணமாக எமது பணியை விரிவுபடுத்தி சமயம், மொழி, கணிதம், விஞ்ஞானம், விவேகம், பொது அறிவு, வாய்மூல கேள்வி பதில் (அறுவர் கொண்ட பாடசாலை குழுக்களுக்கிடையில்) போன்ற இன்னோரன்ன விடயங்களிலும் போட்டிப் பரீட்சைகள் நடாத்தி பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வருகின்றோம்.

மேற்குறிப்பிட்ட செயற்பாட்டின் பரிணாம வளர்ச்சியாக கடந்த ஆண்டு முதல் மாத்தளை மாவட்ட தமிழ் பாடசாலைகளில் கல்வி கற்கும் பொதுத்தராதர சாதாரண பரீட்சைக்கு தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளுக்கு பட்டக்களப்பிலுள்ள மஞ்சரி ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட கணிதப் பாடக் கேள்வித்தாள்களைத் தருவித்து ஒரு முன்னோடிப் பரீட்சையாக நடாத்தும்படி (பாடசாலை அதிபர்களுக்கு) அனுப்பி வருகின்றோம். அத்துடன் இவ்வாண்டு தரம் 4,5 க்கும் 10, 11 க்கும் சைவசமயப் பாடத்திட்டங்களை உள்ளடக்கியதாக திருவள்ளுவர் குருபூசைப் போட்டிப் பரீட்சைகளையும் நடாத்தினோம்.

எமது இப்பணியை சம்மந்தப்பட்ட பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் மாணவர்களும் வெகுவாகப் பாராட்டி வரவேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சந்தர்ப்பத்திலே எமது கல்விச் சேவைக்கு ஆர்வமுடன் தம் பங்கினை மனமுவந்து அளித்து வரும் அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை சைவப்பிரகாசசபையின் சேவைகள் அனைத்தும் இலவசமாகவே செய்யப்படுகின்றதென்பது அனைவரினதும் சிந்தனைக்குரியது. இவற்றிற்குப் பெரியோர்கள் தாமாகவே முன்வந்து அளிக்கும் பொருளுதவிகளையும் பெற்றுக்கொள்கின்றோம்.

தடைப்பட்டிருந்த எமது சபையின் சைவக்கதிர் சஞ்சிகையை மீண்டும் வெளியிடுகின்றோம். இது எமது இளஞ் சமுதாயத்தினரின் கல்வி மேம்பாட்டிற்கு உந்து சக்தியாக அமைவதுடன் மொழி அறிவு, இறைபக்தி, குருபக்தி, அடக்கம், அமைதி, எளிமை, பொறுப்புணர்ச்சி, ஒழுக்கம் ஆகிய நற்பண்புகளின் பெருக்கை உள்ளத்தில் ஊற்றெடுக்கச் செய்யும் என்றும் நம்புகின்றோம்.

சைவக்கதிர் சஞ்சிகையை வயது வித்தியாசமின்றி யாவரும் படித்துப் பயன்பெறலாம். எமது இப்பணி தொடர அனைவரும் இச்சஞ்சிகையை வாங்கிப் படித்து பயனடைவீர்களாக. இதனால் கிடைக்கும் வருவாய் அனைத்தும் கல்விப் பணிக்கே செலவிடப்படுமென்பதை மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"

நன்றி !

உருத்திரா சின்னத்தம்பி

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."



ஆற்றல் மிக அறிவினைத்தருவதே சிறந்த கல்வி.
பெருமைக்கும் புகழைச் சிறமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்.

-திருக்குறள்

- நன்றாகப் படி. வாழ்வதற்காகவே படி. படிப்பதற்காகவே வாழ். எல்லாவற்றையும் படிக்காதே.
- படிக்க வேண்டியவைகளை மட்டும் படி. படித்து அறிந்தவைகளைச் சிந்தித்து உணர். நல்லதைக் கொள். அப்படியே நட.
- வாழ்ந்து கெட்ட மாந்தர் சிலர். பேசிக்கெட்ட மாந்தரோ பலர். ஆகவே முதலில் காப்பாற்றப்பெற வேண்டியது நாக்கு.

கி. ஆ. பெ. விஸ்வநாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம்



உலகத்தின் தொன்மைக்குத் தொன்மையாய் உள்ள
ஒரு சமயம் சைவமென உரைத்திடுவார் மேலோர்
பலப்பலவாம் சமயங்கள் பாரில் உளவேனும்
பல நதிகள் சங்கமிக்கும் சாகரமாம் சைவம்
நிலைபெற்று அன்பதனை நெறியாகக் கொண்டு
நிமலன் திருவடி வேண்டும் அனைவருக்கும் அருளும்
திலகமென விளங்குகின்ற அருள்வழியால் இதனை
செப்புகின்றார் சைவமே சிரோ ரத்னம் என்றே.

சைவம் என்ற சொல்லுக்குச் உயிர் கொல்லாமை
சாந்தமொடு சினமின்மை, பணிவு, நேர்மை,
சைவம் என்ற சொல்லுக்கு அடக்கம், அன்பு,
தன்னடக்கம், புலனடக்கம், தூயபக்தி.

சைவம் என்ற சொல்லுக்கு இறைவன் அன்றி
தன்னிச்சை எதுவுமில்லை என்று என்றும் எண்ணம்
சைவமென்ற சொல்லுக்கு சிவத்தைச் சார்ந்து
சதா காலம் சிவபோகம் திளைத்தல் என்பாம்.

பாலைக் கொடுத்து சம்பந்தரைப் பாடவைத்தது சைவம்.
ஓலை கொடுத்துச் சுந்தரரை உரிமை கொண்டது சைவம்
சூலைக் கொடுத்து நாவரசை திருப்பப்பெற்றது சைவம்
காலைக் கொடுத்து மணிவாசகரின் வாசகம் கண்டது சைவம்.

என்னாட்டவர்க்கும் இறைவனாம் எம்மான்
தென்னாட்டவர்க்கே சிவமாக நின்றான்
தன்னாட்படை சைவம் சார்ந்தோர்
தன் திருவடி தன்னைச் சார்ந்து நிற்பதால்

எப்போதும் சிவபோகமே புசிப்போம்
எங்கும் நிறைந்தவன் எம் சிவம் என்போம்
தப்பில்லா சைவம் சார்ந்திடுவோம்
சந்ததம் சிவசிவா இணைப்பினைத் தொழுவோம்.

நன்றி – எழுத்தாளன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- அருணை பாலறாயன்

விநாயகர் என்ற சொல்லிற்கு மேலான தலைவன் என்பது பொருள். தமக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவருக்கு விநாயகர் என்ற பெயர் பொருந்தும்.

மற்றத் தெய்வங்களை வணங்கினால் பலன் உண்டு. வணங்கவில்லை என்றால் பலன் கிடைக்காது. ஆனால் விநாயகரை வணங்கினால் எடுத்த செயல் முடியும். வணங்காது ஏதும் செயல் தொடங்கினால் அந்தச் செயல் முற்றுப் பெறாது. அதோடு மட்டுமன்றி எடுத்த செயலுக்கு இடையூறும் உண்டாக்குவார். இடையூற்றை உண்டாக்குவதால் விநாயகருக்கு "விக்கினராசா" என்றும் இடையூற்றை நீக்குவதால் அவருக்கு "விக்கினேசுவரர்" என்றும் பெயர்கள் உண்டு.

| | | |
|---|---|---|
| கணபதி | – | சிவகணங்களுக்குத் தலைவன். |
| கணேசன் | – | சிவகணங்களுக்கு இறைவன். |
| மூத்த பிள்ளையார் | – | முருகனுக்கு மூத்தவர். |

இந்தப் பெயர்கள் இக்கருத்தில் அமைந்தவை.

விநாயகரைப் பற்றிய குறிப்புத் தேவாரங்களில் காணப்படுகின்றது. திருவாசகத்தில் விநாயகரைப் பற்றி ஏதும் குறிப்புக் காணப்படவில்லை. இதனால் தேவார மூவர்க்கு முந்திய காலத்தில் மாணிக்கவாசகர் வாழ்ந்திருக்கலாம் என்ற கருத்து உண்டு.

விநாயகர் தோற்றம் பற்றிப் பலவகையாகப் புராணக் கதைகள் உள்ளன. எனினும் சைவர்கள், திருமுறையில் உள்ள செய்தியையே சிறந்ததாகக் கொள்வர்.

கயிலாயத்தில் சித்திர மண்டபத்தில் இறைவன், இறைவி இருவர்க்கும் உரியதாக இரு பிரணவ வடிவங்கள் எழுதப்பட்டிருந்தன. அதை உமையம்மை வியந்து பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்ததால், அம்மையின் திருநோக்கால் இயற்கையில் யானை போன்ற வடிவத்தை உடையனவாய் இருந்த அந்தப் பிரணவ வடிவங்கள் உண்மையில் ஆண் யானை, பெண் யானையுமாகிக் கலந்திட யானைமுகம் உடைய விநாயகக் கடவுள் தோன்றினார்.

இந்தக் கருத்தையே திருஞானசம்பந்தர்:-

பிடியதன் உரு உமை கொள மிககரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்
கடி கண பதிவர அருளினன் மிக கொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே

எனப் பாடியருளினார். எனவே விநாயகர் தோற்றம் பற்றிய பிற புராணக் கதைகளைச் கருத்தில் கொள்ளல் கூடாது.

விநாயகருக்கு நான்கு கைகள் இருப்பது தேவர் கூறு- யானைத்தலை, யானைக்காது, தும்பிக்கை விலங்கின் கூறு- பேழை வயிறும் குறுகிய கால்களும் பூதக் கூறு- மேலும் வலப்பக்கம் தந்தம் இல்லாதது பெண் கூறும் இடப்பக்கம் தந்தம் இருத்தல் ஆண் கூறும் ஆகும். முகம் அஃறிணைக் கூறும். பிற உறுப்புக்கள் உயர்திணைக் கூறும். ஆதலால் ஆண்பெண்- உயர்திணை - அஃறிணை - தேவர் - பூதர் - விலங்கு என இவ்வாறு பகுத்துக் கூறும் எல்லாப் பொருள்களிலும் விநாயகர் திருவுரு விளங்குவதையறியலாம்.

விநாயகர் திருவுருவை மாக்கல், உதிர்கல் அல்லது கருங்கல்லாலும், பொன், வெள்ளி, செம்பு இவற்றாலும், பளிங்கு முதலிய மணிவகைகளாலும் அமைக்கலாம். இத்திருவுரு தீண்டி வழிபாடு செய்யத்தக்கது.

மரம், சுதை இவற்றால் செய்யப்பட்ட திருவுருவங்களும், ஓவியமாக எழுதப்பட்டவையும் தீண்டாத் திருமேனியாகப் பூமாலை சாத்திப் புகை, ஒளி காட்டி மலர் தூவி வழிபாடு செய்தற்குரியன.

மஞ்சள், சந்தனம், மண் இவற்றால் அமையும் திருவுருவை மேலே கூறியது போல வழிபட்டு அப்பொழுதே விடுதற்குரியது. விநாயகருக்கு எளிய பொருள்களைப் படைத்துப் பெரும்பயன் அடையலாம்.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்.

என ஔவையார் நல்வழியில் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் தேவர்களின் பொருட்டுத் திரிபுரம் எரிக்கத் தேர் ஏறிச் சென்றபோது அவர் சென்ற தேர் அச்சினைக் கணபதி முறித்துத் தடை செய்தார். திரிபுரம் எரிக்கச் சென்றபோது சிவபிரான் விநாயகரை வணங்காது செல்லவே அவர் ஏறிச் சென்ற தேர் அச்சினைப் பிள்ளையார் முறித்தார் எனச் சிலர் கருதுகின்றனர். கூறியும் வருகின்றனர்.

சிவபிரான் யாரையும் வணங்குவது இல்லை. சிவபிரான் பிற தெய்வங்களை வணங்கியதாக எங்கும் கூறப்படவில்லை. உண்மையில் சிவபிரானை வேண்டிச் செல்லும் தேவர்கள் திரிபுரம் எரிக்க இறைவன் புறப்படும் முன்பு விநாயகரை வணங்கியிருக்க வேண்டும். சிவபிரான் நம்முடன் வரும்போது விநாயகரைத் தாம் வணங்கத் தேவையில்லை என்று கருதிச் செருவுக்குச் சென்றதால் தேவர்களின் பொருட்டே விநாயகர் சிவன் ஏறிய தேர் அச்சினை முறித்தார். இதனால் அறிவு பெற்ற தேவர்கள் விநாயகரை வந்து வணங்கிப் புறப்பட்டனர் என்பது வரலாறு.

காப்புச் செய்யுளாக விநாயகருக்கு முதலில் ஒரு பாடல் பாடும் மரபு பின்னாளில் ஏற்பட்டிருக்கிறது. தேவாரத் திருமுறைத் தொகுப்பில் கூட விநாயகருக்கு உரிய பாடல்கள் முதலில் வைத்துத் தொகுக்கப்படவில்லை. 11 ஆம் திருமுறையில் விநாயகர் பற்றிய பாடல்களை நம்பியாண்டார் நம்பிகள், நக்கீரதேவர், கபிலதேவர் முதலியோர் பாடியுள்ளனர். 12 ஆம் திருமுறையான பெரிய புராணத்தில் 3 ஆம் திருப்பாடலாக விநாயகர் வணக்கம் வருகிறது. ஆனால் சைவ சித்தாந்த சாத்திர நூல்களில் விநாயகர் காப்புச்செய்யுள் உள்ளது.

வரலாற்று நோக்கில் பார்க்கும்பொழுது விநாயகருக்கு முற்காலங்களில் ஆகம விதிப்படி திருக்கோயில்களில் இடம் இல்லாதிருந்திருக்கிறது. எனவேதான் தமிழ் நாட்டில் கோயில் அல்லாத மரத்தடி, குளக்கரை, தெருக்கோடி எனப் பல இடங்களில் விநாயகர் திருவுரு வைத்து வணங்கப்பட்டிருக்கிறது. பின்னாளில் கோயில் மதிற்சுவர், கற்றூண்கள், சுற்றுப்பிரகாரம் என விநாயகர் திருக்கோயிலில் இடம் பெற்றிருக்கிறார்.

விநாயகர் எளிய கடவுள் என்பது போலவே அவர் மேல் பாடப் படும் துதிப் பாடல்களும் எளிமையானவை.

வேழ முகத்து விநாயகனைத்தொழ
வாழ்வு மிகுத்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயக னைத்தொழத்
துள்ளி ஓடும் தொடர்ந்த வினைகளே!
அப்பம் முப்பழம் அமுதுசெய் தருளிய
தொப்பை யப்பனைத் தொழவினை யறுமே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் வாழ்த்து

அன்பு, அருள், அறிவு பொங்க

அறம், பொருள், அமைதிபொங்க

பண்புறு கலைகள் பொங்க

பயன்தரு தொழில்கள் பொங்க

தென்புறு கல்வி பொங்க

திருவருட் செல்வம் பொங்க

இன்புறும் நலத்தால், எங்கும்

ஏறுபோல் தமிழர் வாழ்க.

வாக்கினில் வாய்மை பொங்க

மனதினில் அன்பு பொங்க

நோக்கினிற் சமதை பொங்க

நுண்ணறி வாற்றல் பொங்க

ஊக்கமும் தொழிலும் வீர

உள்ளமும் திருவும் பொங்க

நீக்கமில் அருளாய்ப் பொங்கி

நிறையிறை போற்றுவோமே!



சைவமகாசபையினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினசரி

## ஆர்வகனல் அருள்

**கவியோகி சுத்தானந்த பாரதி.**

அன்பர்களே பொழுதைப் பொன்னாக்குங்கள். ஒரு நிமிடத்தைக்கூட வீணாக்காதீர்கள். யோசித்துப்பாருங்கள். நாளைக்கு 24 மணிநேரம் அதில் சுமார் எட்டுமணிநேரம் இளைப்பாறலாம். தேகப்பயிற்சி செய்ய, குளிக்க, துவைக்க, உணவெடுக்க நான்கு மணிநேரம் வைத்துக் கொள்ளுங்கள். வயிற்றுப்பிழைப்பிற்காகத் தொழில்புரிய 8 மணிநேரம் போகட்டும். இந்த 8 மணி நேரத்தைப் பெண்கள் வீட்டு வேலைகளிலும், தொழிலுக்காக ஆண்கள் வெளியிலும் கழிக்கலாம். மீதி 4 மணிநேரம் உள்ளது. அதை வீணாக்காதே. அறிவுப் பயிற்சியிலும், ஆன்மப்பயிற்சியிலும், அதைச் செலவிடுங்கள். மனச்சாட்சியைக் கேளுங்கள். காலை அரைமணி, மாலை அரைமணி தியானியுங்கள்.

இன்றளவில் எத்தனை நாட்கள், எத்தனை மணிகள், எத்தனை நிமிடங்கள், எங்கள் வாழ்வில் கழிந்து போயின. இந்த ஓட்டைக் குடத்தினின்று துளித்துளியாக எங்கள் ஆயுள் வெளியேறிச் செல்கிறது. போனது வராது.

எங்கள் உள்ளத்திலேயே குடிகொண்டிருக்கும் ஒரு சுகப் பொருளை, சுத்தமுக்த பரம்பொருளை மனங்குவிந்து நினைக்க நாளைக்கு ஒருமணி நேரத்தையாவது ஒதுக்குங்கள்.

காலை ஐந்து மணிக்கு எழுந்திரு. பல்விளக்கு. நாக்கையும் மூக்கையும் நன்றாகச் சுத்தம் செய். நாக்கு நாறினால் சீக்கு. ஓர் அளவு குளிர்நீர் குடி. தனியாக வெளியே புறப்படு. பொன்னும் பச்சையும் குலுங்கும் இளங்காலையில் நல்ல காற்றை உட்கொள்ள சுமார் ஒரு மைல் தூரம் நட. இதனால் குடல் சுத்தமாகும்.

அல்லும் பகலும் அபயமிடுகிறேன். பரம்பொருளே! மனக்கிரங்காயோ! கல்லுக்கு முறையிட்டும் காளியைக் கண்டார் ஸ்ரீ பரமஹம்ஸர். உயிர் துடிக்கும் உள்ளத்தில் உள்ள உனக்கு நான் முறையிடுகிறேன்; மாயப்பித்தர் மண் பொன் வேண்டுவர். நான் மண் பித்தன் அல்லேன். நான் உன் பித்தன்; உன்னையே வேண்டுகிறேன். என் உள்ளக்கோயிலில் சுத்தசக்தி வடிவாக உன்னைத்தியானித்து, அன்புமலர் தூவி வழிபடுகின்றேன். அம்மையே உன்னருளால்தான் உன்னைக்காண முடியும். தீயிற்சூடு, கதிரில் ஒளி, பாலில் வெண்மை, தண்ணீரில் தண்மை, கனியில் இனிமை, பாட்டில் ஓசை, அறிஞர் அறிவு, அன்பரில் அன்பு எல்லாம் உனது அருட் சக்தியே. நாவுகம் உனதருளின் நாமரூபமே. ஆறுகள் பல, உயிர் ஒன்று. கார்கள் பல, வானம் ஒன்று. மணிகள் பல, மாலை ஒன்று. மரங்கள் பல, மண்ணிலம் ஒன்று. இவ்வாறு ஒன்றிற் பல கூடுவதும், ஒன்று பலவாவதும் உனது அருள் விளையாட்டே. இருப்பது சுத்தன். இயங்குவது சக்தி. இருப்பது சத்து. இயங்குவது சித்து.

இயக்கம் ஆனந்தம் உனது சந்நிதி மாத்திரத்தில் நிலவருள் ஐந்தொழில் புரிகிறது. சச்சிதானந்த சுத்த சக்தியாய் விளங்கும் குருவனே, உனதருள் என்னுள் விளையாடுக.

சைவக்கதிர் சஞ்சிகை பற்றிய ஆலோசனைகளையும், விமர்சனங்களையும் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். ஆக்கங்களையும் அனுப்பி வைக்கவும்.

ஆ-ர்



மனநிம்மதி, ஆனந்தம், அன்பு, தவம், தியாகம் ஆக்கம், முதலிய குணங்கள் பணத்தால் வருவது இல்லை.

—விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவலிங்கம்

– அருணை பாலறாயன்

சிவலிங்கம் என்பதற்குக் குறி அல்லது அடையாளம் என்பது பொருள். சிவலிங்கம் என்ற சொல் சிவனுக்கு உரிய அடையாளம் என்ற பொருளைத் தரும்.

சிவலிங்கம். சிவன் திருக்கோயில்களில் கருவறையில் வைத்து வழிபடப்படும். தில்லையில் பொன்னம்பலத்தில் மட்டும் மூலவராக நடராசர் திருவுருவம் உள்ளது. மற்ற இடங்களில் எல்லாம் சைவக் கோயில்களில் சிவலிங்கமே மூலவராக அமைந்திருக்கும். தில்லைக்குச் சென்று செய்யும் தரிசனம் சிவானுபவத்தைத் தரும் என்பதாலும் அவ்வனுபவம் சிவஞான நடனத்தால் வரும் என்பதாலும் தில்லையில் நடராசர் திருவுரு மூலவராக அமைந்துள்ளது. சிவதத்துவத்தை விளக்கும் நோக்கோடு பிற திருக்கோயில்களில் இலிங்க வடிவம் அமைக்கப்பெற்றுள்ளது. சிவலிங்க வடிவம் சதாசிவ மூர்த்தம் எனப்படும்.

இறைவனுக்கு உருவம், அருவுருவம், அருவம் என்ற மூவகைத்திருமேனிகள் உள்ளன.சிவலிங்க உருவம்., அருவம் இரண்டிற்கும் இடைப்பட்ட அருவுருவ நிலையைக் குறிப்பது.

உருவம் கண்ணுக்குத் தெரிவது. அருவம் கண்ணுக்குப் புலப்படாது. அருவுருவம் ஒருவகையில் கண்ணுக்குப் புலப்பட்டும். புலப்படாது இருப்பதும். காற்று அருவுருவப் பொருள் என்ற கருத்து உண்டு. ஏனெனில் கண்ணுக்குத் தெரியாததால் அது அருவம் என்றும் நம் உடலில் படும் போது நாம் அதை உணர்வதால் அது உருவம் என்றும் இருவகைநிலை அதற்கு உள்ளதால் காற்றை அருவுருவம் என்பர்.

சிவலிங்க உருவமும் கண்ணுக்குத் தெரிகின்றது. எனவே அது உருவம். ஆனால் உருவத்திற்கு உரிய உறுப்புக்கள் ஏதுமில்லை. எனவே அது அருவம். இந்த இரண்டு நிலையில் சிவலிங்கம் இருப்பதால் அது அருவுருவம் என்பர். சேக்கிழார் பெருமான் –

காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்.

எனச் சிவலிங்க விளக்கம் தருகின்றார். அருவுருவமாகிய சிவலிங்கம் அருவம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவம் என்ற இரண்டு தன்மைகளுக்கும் காரணமாய் உள்ள அடையாளம் எனக் கூறுகின்றார்.

சிலிங்கம் என்ற சொல்லிற்குச் சில விளக்கங்கள் கூறப்படுகின்றன.

1. லிங் - ஒடுக்கம்

கம் - தோற்றம்

உலகம் தோன்றி ஒடுங்குவதை குறிக்கும் அடையாளம்.

2. லிங்கம் - பேரொளி

படைத்தல். காத்தல். அழித்தல்.மறைத்தல். அருளல் என்ற

ஐந்தொழில்களால்

உலகை ஒளியாக்கி வைப்பது.

3. லிங்கம் - அடையாளம்

பரம்பொருளுக்கு உரிய அடையாளம்.

இலிங்கத்தின் அடிப்பாகம் நாற்கோணமாயிருக்கும். இது பிரமபாகம். நடுப்பாகம் எட்டுக் கோணமாயிருக்கும். இது விஷ்ணுபாகம். மேற்பாகம் உருத்திர பாகம். எனவே. மும்மூர்த்திகளின் உள்ளடக்கம் இலிங்கம் என்பர்.

கல்லால் அமையும் சிவலிங்கம் சைலஜ லிங்கம் எனப்படும். மணியால் (மாணிக்கம். மரகதம்) அமையும் சிவலிங்கம் ரத்னஜலிங்கம் ஆகும். உலோகத்தால் (பொன். வெள்ளி) அமைவது லோகஜலிங்கம் எனக் கூறப் பெறும் .அரிசி. மணல். விபூதி. சந்தனம் இவற்றில் அமைவது க்ஷணிக லிங்கம்..

எழுவகை இலிங்கங்கள் என்று சிவலிங்க வகை கூறப்படும்.

1. தைவிக லிங்கம் -தேவர் வழிபட்டது.
2. தேவிக லிங்கம் - அம்பிகை வழிபட்டது.
3. ஆரிட லிங்கம் - முனிவர்கள் வழிபட்டது.
4. மானுட லிங்கம் - மானிடர் வழிபட்டது.
5. திவ்விய லிங்கம் - அவதாரப் புருஷர்கள் வழிபட்டது.
6. ஆசுர லிங்கம் - அசுரர்கள் வழிபட்டது.
7. திவ்விய லிங்கம் - ஜோதிர் லிங்கங்கள்.
8. சுயம்பு லிங்கம் - இலிங்க வடிவில் இயல்பாக அமையும் கல். மணி போன்றவை.

இலிங்கம் சிவனுடைய வடிவமென்றும். இலிங்க பீடம் சக்தியின் வடிவம் என்றும் கருதிச் சிவலிங்க வடிவம் சிவசக்தி விளக்கம் என்பது ஒரு கருத்து.

சிவபூசை செய்வோர் சிவலிங்க உருவம் செய்து வைத்து நாள் தோறும் அத்திருவுருவைப் பூசிக்கலாம். அப்படி நிலையாகச் சிவலிங்க உருவம் வைத்துக் கொள்ள இயலவில்லை என்றால் அவ்வப்போது நாமே சிவலிங்கத் திருவுத்ருவைச் செய்து கொள்ளலாம். இதற்கு க்ஷணிக லிங்கம் என்று பெயர். பூசை முடித்ததும் இதை நீரில் கரைத்து அல்லது செலுத்தி விடலாம். க்ஷணிக லிங்கத்தை நாம் மண். சந்தனம். மஞ்சள் வெண்ணெய் . மாவு. உருத்திராட்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் போன்றவற்றால் அமைத்துக் கொள்ளலாம். இவ்வாறு அமையும் க்ஷணிக லிங்கங்களுக்கு நீர், பால், தயிர் போன்றவற்றால் அபிஷேகம் செய்ய இயலாது. பூசையில் அபிஷேகம் செய்வதாகப் பாவனை கொண்டு வழிபட வேண்டும்.

சிவபெருமான் நெருப்பு வடிவமாக உள்ளவன் என்ற குறிப்பில் சிவலிங்கத் திருவுரு அமைந்துள்ளதாகக் கூறுவர். பஞ்ச பூதங்களான நிலம், நீர், தீ, காற்று, வான் இவற்றுள் "தீ" அருவுருவமானது. தீயின் ஒளி கண்ணுக்குத் தெரிந்தாலும் அதற்கு ஒழுங்கான வடிவம் இல்லை. மேலும் "தீ" எல்லா இடங்களிலும் மறைந்தும் இருக்கும். சில வேளை வெளிப்பட்டும் தோன்றும். அதனால் சிவபிரான் நெருப்பு வடிவினன் - என்பர் திருஞான சம்பந்தர்.

பொங்கு அழல் உருவன்

எனப் பெருமானைப் பாடுகின்றார்.

திருமாலும், பிரமனும் சிவபிரானின் அடி, முடி தேடியபோது சிவபிரான் நீண்ட தழல் உருவமாக நின்றான் என்றும், அப்படி நின்ற இடமே "திருவண்ணாமலை" என்றும் புராணம் கூறும். அடி, முடி தேடி இருவரும் இயலாது களைத்தபோது அவர்களுக்கு இரங்கிச் சிவலிங்கத் திருவுருவில் வந்து அடங்கினான் என்றும் அதுவே "லிங்கோத்பவ மூர்த்தி" என்றும் கூறுவர். திருக்கோயில்களில் கருவறையின் நேர்பின்புறம் "லிங்கோத்பவ மூர்த்தி" என்றும் உள்ளதைக் காணலாம். இந்த வரலாற்றை அப்பரடிகள் தேவாரத்துள் இலிங்க புராணத் திருக்குறுந்தொகையுள் பாடுகிறார்.-

செங்கணானும் பிரமனும் தம்முளே
எங்கும் தேடி திரிந்தவர் காண்கிலர்
இங்குஉற்றேன் என்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

## சூரிய வழிபாடு

ஓ ஓ

*தினமும் காலையிலும் மாலையிலும்*
*அமர்ந்து தியானம் செய்யுங்கள்*
*அது உங்கள் மனதை மெல்லமெல்லப்*
*பண்படுத்திக் கொள்வதற்குப்*
*பழகிக்க முடியும்.*
*உலகத்தில் ஒளியே இல்லாமல் போயிருந்தால் நாம்*
*கண் இருந்தும் குருடர்களாகவே இருப்போம்.*
*அதனால் தான் ஒளியைத் தரும் சூரியனை நாம் வழிபடுகிறோம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவ்வை சொன்னது அர்த்தமுள்ளது.

எளிய நடையில் உயர்ந்த கருத்துக்களைச் சுருங்கிய சொற்களில் நிறைய அமைத்து மக்கள் எளியதாக உணர்ந்து ஒழுகுவதற்கேற்ற வகையில் ஒழுக்கத்தை வற்புறுத்தும் சிறு இலக்கியங்கள் பலவற்றை நமது முன்னோர்கள் வழங்கிச் சென்றிருப்பது சைவமும், தமிழும் பெற்ற பெரும்பேறு ஆகும்.

1. இளமையில் மட்டுமல்ல முதுமையில், பள்ளியில் மட்டுமல்ல வெளியிலும், படிக்கும்போது மட்டுமல்ல படிப்பை முடித்த பிறகும், வேலையில் இருக்கும்போதும் மட்டுமல்ல, ஓய்வுபெற்ற பிறகும், வேலையில், வேலையில்லாத போதும் மட்டுமல்ல, வேலையுள்ள போதும், வறுமை வந்த போது மட்டுமல்ல, செல்வம் வந்த போதும், அறிவற்றபோது மட்டுமல்ல அறிவைப் பெற்ற போதும் படிக்கத் தகுந்த நூலைப் படித்துக்கொண்டேயிரு. படிக்காமல் ஒரு நாளையும் வீணாக்கிவிடாதே. வீணாக்கினால் உன் வாழ்வின் ஒரு பகுதி வீணாகும். ஓதாமல் எண்பதற்குத் தொழாமல் எவரும் பொருள் கூறுவதுண்டு. ஆகவே

"ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்."

2) உயர்ந்தவரை மட்டுமல்ல தாழ்ந்தவரையும், செல்வந்தரை மட்டுமல்ல அறியாதவரையும், உறவினரை மட்டுமல்ல அல்லாதவரையும், நண்பர், பகைவர் முதலிய எவரையும் தீயசொற்களைக் கொண்டு வையாதே! வைதால் உனது வாழ்வு சிறக்காது.

"ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்."

3) வலிமை உள்ள போது மட்டுமல்ல தளர்வை அடைந்த போதும், வாழ்வுள்ள போது மட்டுமல்ல, தாழ்வடைந்த போதும், குழந்தைப் பருவத்துள் மட்டுமல்ல, முதுமைப்பருவத்தும், மணமுடியா முன்பு மட்டுமல்ல மணமுடித்த பின்னும், பிள்ளையில்லாத போதும் மட்டுமல்ல, பிள்ளைகள் உள்ளபோதும், தந்தையில்லாத போதும், தந்தையில்லாத போது மட்டுமல்ல தந்தையுள்ள போதும், காலைப்பொழுதும், பகற்வேளையிலும், மாலைப்பொழுதும், மாலையிலும், இரவு நேரங்களிலும் ஆகிய எப்போதும் பாலூட்டி, தாலாட்டி, சீராட்டிப், பாராட்டி பெற்ற வளர்த்து வந்த தாயை மறவாதே. அவளது வயிற்றைப் பசி எடுக்கும்படி விட்டுவிடாதே. முன்னரில் நீ குடியிருந்த இடம் அது. அவள் உள்ளபோது மட்டுமல்லாமல் இறந்த பிறகும் அவளை வணங்க மறவாதே. மறந்தால் உனது வாழ்வுகெடும்.

"மாதாவை ஒரு போதும் மறக்க வேண்டாம்"

4) உள்ளத்தில் பகையும் உதட்டில் உறவுங்கொண்டு வஞ்சனை செய்து வாழுகின்ற மக்கள் பெரியவராயிருப்பினும், உயர்ந்தவராயிருப்பினும் ஆசிரியராயிருப்பினும், தலைவர், தொண்டர், நண்பர் ஆகிய எவராயினும் சரியே. அவரோடு இணங்கி வாழ்ந்து விடாதே! வாழ்ந்தால் பழி மிகுந்து புகழ் இழிந்து வாழ்வு அழிய நேரிடும்.

"வஞ்சனைகள் செய்வாரோடிணங்க வேண்டாம். பொய் சொல்லுமிடம், சூதாடுமிடம், சூது செய்யுமிடம்."



கற்பனைகள் அனைத்தையும் கடந்தவன் இறைவன். அத்தகைய ஒருவனைக் கற்பனைக்குள் கொணர இயலாது.

- வள்ளலார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) மது (போதைப் பொருள்) விற்குமிடம், குடிக்குமிடம், கள்ளர் இருக்குமிடம், களவுசெய்யுமிடம், கற்பு அழியுமிடம், கற்பை விற்குமிடம், கொலை செய்யுமிடம், கொலைஞர் வாழுமிடம், நடக்காத பாதை, அழைக்காதவீடு, மதிக்காத இடம், முதலியவிடத்திற்குப் போய்விடாதே! போனால் மானம், மரியாதை, செல்வம், ஒழுக்கம், முதலியவைகளையே இழந்து உயர்ந்தோரால் பழிக்கப்படுவாய்.

"போகாத இடந்தனிலே போக வேண்டாம்"

6) ஒருவரை முன்னே போகவிட்டு பின்னால் பழி கூறிப்போவதும், தம்முன் இருக்கும்வரை ஒருவரைப் புகழ்ந்து பேசி நீங்கிச் சென்ற பின் அவரை இகழ்ந்து பேசுதலும், தம்மிடம் வேலை பார்க்கும் வரை ஒருவரை புகழ்ந்திருந்து, நீக்கிய பிறகு அவரைக் குறைகூறுவதும், ஒருவர் ஆதரிக்கும் வரை புகழ்ந்திருந்து நீங்கிய பிறகு அவரை இழித்துக் கூறுதலும், நட்புக் கொண்டிருக்கும் வரை பாராட்டியிருந்து மாறுபட்டபின் அவரைப் பழி கூறுதலும், தன் கட்சியிலிருக்கும் வரை ஒரு தொண்டரைப் போற்றிக் கொண்டிருந்து பிற கட்சிக்குச் சென்றுவிட்டபின் அவரைத் தூற்றிக் கொண்டிருத்தலும், தான் ஒரு கட்சியிலிருக்கும் போது ஒரு தலைவரை உயர்த்திக் கூறியிருந்து வேறு கட்சிக்குச் சென்றபின் அவரைத் தாழ்த்திக் கூறுதலும், ஆகிய தவறான செயல்களை நீ செய்து அலையாதே. செய்து திரிந்தால் அவ்வழிவு உன்னையே வந்தடைவதோடு நல்லறிஞர்களால் பழிக்கப்பட்டும் விடுவாய்.

"போக விட்டுப் புறம் கூறித் திரிய வேண்டாம்"

நன்றி–சைவநேசன்



பக்தியின் மூலம் நமக்கு அவ்வப்போது சில காரிய சித்திகள் கிடைக்கும். அந்தப் பலன்களே போதும் என்ற திருப்தியடைந்து பக்திப்பணியை விட்டுவிட்டால், நாம் முன்னேற்றமடையும் முழுவாய்ப்பையும் இழந்துவிட்டவர்களாகி விடுவோம்.

நற்குணங்களில்லாத குழந்தைகள், நல்ல நடத்தையைக் குறிக்கோளாகக் கொள்ளாத கல்வி, நீதியில்லாத வாழ்க்கை ஆகியவை நோக்கமற்றவையும் பயனற்றவையுமாகும்.

–ஸ்ரீ சத்ய சாயிபாபா



பயன் கருதிச் செய்யப்படும் வேலை தொண்டாகாது! தொண்டு என்பது அடிமை வேலையன்று அது தெய்வப்பணி.

–திரு. வி. க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத் தேன்

தமிழ் நாவலர். புலவர் சி. அரசமலையார் தமிழாசிரியர், திருச்சி.

திருவாசகம் நாற்பொருள் கூறும் சிறந்த நூல். அதில் அமைந்துள்ள சொற்றொடர்களும், உவமைகளும் படிக்கப் படிக்கப் பேரின்பம் தருவன. அவற்றிற்கு மேல் சொற்பொருள் உணர்ந்தால் மனம் கனியும். அக்கனிவில் பக்தி பிளிரும்; அன்பும், அறிவும், மெய்யுணர்வும் மாறிமாறித் தோன்றும். அதன் அளப்பரும் பெருமை நோக்கியே "திருவாசகத்தேன்" என்று பலரும் பாராட்டினர்.

தேன் சுவையானது; அறுசுவையுள் இனிப்புச் சுவையை நல்கவல்லது. அத்தேன் மருந்தாகவும், மருந்திற்குத் துணையாகவும் உணவாகவும் பயன் தருகின்றது. அது போலவே திருவாசகம் சிறந்த சொற்சுவை நிறைந்த இலக்கியமாகவும், சைவசித்தாந்தம் நிறைந்த ஞானப் பேழையாகவும், தெவிட்டாத இன்பம் நல்கும் பக்திச் சுரங்கமாகவும் விளங்குகின்றது.

தேன் மலரிலிருந்து கிடைக்கின்றது. மலர், தோற்றம், அழகு, மணம், மலர்ச்சி, தேன் இவ்வளவையும் கொண்டு மிளிர்கின்றது. வண்டு தேனை உண்டு விடுமானால் மலர் தோற்றமிழந்து, அழகு இழந்து, மணமின்றி, மலர்ச்சியின்றி வாடிவிடும். அதைப்போலவே, சொல் மலர் குறிக்கோள் மிக்க பெரும் பொருளைக் காட்டவில்லை என்றால் அச்சொல் நன்றாக இருந்தும் அழகாக இருந்தும், எளிய பொருள் தரினும், ஓசையழகு இருப்பினும் பயன் இல்லை. திருவாசகம் தேன் நிறைந்த சொல் மலர். அம்மலரில் எல்லா நலங்களும் இருக்கின்றன. அவற்றிற்கு மேலாகத் திருவாசகத்துள்ள ஒவ்வொரு வாசகமும் கடவுளை, அவர் அருளை, அவற்றைத் தடுக்கும் வினையை, நாம் அடையும் வழியைக் கூறுகின்றது.

பேரிறைவனைப் பாராட்டி நன்றி கூறும் பாடல்களே, திருவாசகம் முழுதும் நிரம்பி வழிகின்றன. கண்ணால் காணும் பொருள்கள் யாவும் கடவுளாகவே மணிவாசகருக்குக் காட்சி அளிக்கின்றன.

வண்டுகளைப் பார்க்கின்றார். அவைகள் மலர்களில் புகுந்து தேனை உண்டு மகிழ்ந்து வெளிவருகின்றன. இறக்கைகள் நனைந்தமையாலும், நிறையத் தேனை உண்டமையாலும் பறக்க முடியாமல் தள்ளாடுகின்றன. "ஏ அரச வண்டே! எத்தனை மலர்களையோ கண்டிருக்கின்றாய்! எத்தனை நிறம்! எத்தனை மணம்! எத்தனை சுவை! அவைகளுக்கு மேலாகத் துளித் துளி தேனுக்கு இடம் விட்டு இடம் தேடாமல் நினைக்கும் போதும் காணும்போதும் பேசும்போதும் எப்போதும் இனிமை வேண்டுமா? உள்ளுருகும் ஆனந்தத் தேன் வேண்டுமா? ஐம்பெருந் தொழிலில் அருட்பெருங் கூத்தாடும் இறைவன் இடையறாது இயற்றும் குனிப்புடையான் திருவடித்தாமரைக்கண்



> தாய் மீதும் தந்தை மீதும் பக்தியில்லாத ஒருவனுக்கு தெய்வபக்தி ஒரு நாளும் வராது. தாய் தந்தையர்கள் துன்மார்க்கர்களாக இருப்பினும், மகன் அவர்களுக்குத்தக்க மரியாதை காட்ட கடமைப்பட்டிருக்கிறான்.
>
> —ராமகிருஷ்ணர்

சென்று ஊதுவாயாக!' என்று மணிவாசகர் வண்டுகளிடம் வேண்டுவது போல் மக்கள் கூட்டத்திடம் வேண்டுகின்றார். அந்த அரிய பாடலைப் பார்ப்போம்:

"தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைந்தோறும் காண்டோறும் பேசுந்தோறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

இப்பாடல் ஒன்றிலேயே இலக்கிய நயத்தையும் சொல்லழகையும் உவமையழகையும் உருவக அழகையும் பேரின்பநாட்டத்தையும் காணலாம்.

நினைத்தல், காண்டல், கட்டுரைத்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலநிலையிற் பதியவைத்தல் ஆகும் நான்கும் முறையே நன்னெறி நான்மையின் பெறுபேறாகக் கொள்க. இதில் சீலம், நோன்பு, செறிவு, அறிவு ஆகிய நாற்பொருளையும் காணலாம்.

மேலும், "அரச வண்டே! சிவபெருமான் தானும் தன் பாகமாகிய திருவருளம்மையு வந்து எளியேனை ஆட்கொண்டருளினன். அவன் அப்படி ஆட்கொண்டருளியமையால் இடையறா நினைப்பாலும், தொடையறா நாப்பாவாலும், நடையறாத் தொழுகையாலும் அவன் திருவடிக்குத் அன்மையாக அன்பின்பச் செல்வங்களுடன் வாழ்ந்து வருகின்றேன். அவன் அருளாதிருந்தால் சேய்மையில் இருப்போம். அத்தகைய முழு முதற் சிவபெருமான் கலப்பத்தன்மையால் வானமும் திசைகளும் கடலும் எல்லாவுலகமும் தானாய் நின்றருள்வன். அவனது மாறா இன்பத்தேன் ஊற்றெடுத்து என்றும் வடியும் திருவடிக்கண் சென்று ஊதுவாயாக!"

அப்பாசுரம் இதோ:

"நானுமென் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்
தானுந்தன் தையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்
வானுந் திசைகளும் மாகடலு மாயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

அம்மையின் அறிவாற்றலாகிய பாலுடன் அப்பன் தொழிலாற்றலாகிய தேன் கலந்து தளை நீக்கி, அல்லலறுத்து ஆனந்தம் ஆக்கும்.

பூந்தேன் நோய் போக்கும். திருவாசகத்தேன் தொல்லை இருப்பிறவி நோய் போக்கும்.

இப்பேரின்பம் கிடைக்க வேண்டுமானால் நம் ஆர்வம், எண்ணம், சொல், செயல் அனைத்தும் கனிவு பெறவேண்டும்.

நமக்குத் தடையாக இருப்பவையெல்லாம் நம் புலன்களே. யானைக்காலில் அகப்பட்ட சிறுசெடிபோல் புலன்களால் என்னுடைய மிதிபட்டு நோகின்றது. என் மனம் கொம்பில்லாத கொடிபோலத் துவள்கின்றது. உன்னருள் பெற்றும் அந்தப் பேரின்ப வாழ்விலேயே நிலைத்திருக்க முடியவில்லை; முடியவில்லை. கடலில் நீர் நிறைந்திருப்பினும் நாய் நக்கித் தானே குடிக்கும்! அதைப் போலவே தேன் பெருகிப் பெருகி வெள்ளமாக ஓடுகின்றது. என்றாலும் நான் சிலநேரம் மருகுகின்றேன்; சிலநேரம் காலில் செல்கின்றவர்கள் தாம் கொண்டு செல்ற நீர் குறைந்ததும் நாவற்றி வருந்துகின்றனர். கால் நிறைய நீர் அலை மோதுகிறது. அதை நாம் குடிக்க முடியுமா? குடித்தாலும் நம் நாவறட்சி தீருமா? அதைப்போலவே நாம் உள்ளுணர்வின்றிக் கற்கும் கல்வியும் செய்யும் பூசனைகளும் கடல்நீர் குடிக்கக் குடிக்க வேட்கை தீர்க்காதது போலவே நம் இறையருட்பேறும் கிட்டாது என்பது குறிப்பு.

வேறு யாது செய்வதென்றால்

அவனருளாலே அவன்தாள் பற்றவேண்டும்.
அவனது அருள் வழியிலே சிக்கிக்கொண்டு
அவனது ஆற்றலிலே வாழவேண்டும்
நமக்கென்று எதையும் செய்யக்கூடாது.

"இருந்தென்னை ஆண்டுகொள்
விற்றுக்கொள் ஒற்றிவை என்னினல்லால்
விருந்தின னேனை விடுதிகண் டாய்"

என்றாற் போலே அடைக்கலம் புகுந்து விடவேண்டும்.

"நஞ்சை அமுதாக உண்ட நீ என் போன்றோர் செய்யும் குறைகளைப் பொருட்படுத்தாது மறந்து மன்னித்து அருள்வாயாக" என்று வேண்டுகின்றார். இந்தத் தேன் ஏன் நமக்குக் கிடைக்கவில்லை என்று மலரும் எண்ணக் கூடும். மலருக்குச் செல்லாமல், புறவிதழை விலக்காமல் அக இதழைத் தழுவாமல் தேன் கிட்டுமா வண்டுக்கு? அதைப் போலவே நாமும் மலம், மாயை, கன்மம் ஆகியவற்றைப் போக்கி மெய்யறிவுடன் விளங்கினால்.

> "மற்றவர்களிடம் பழகும் விதத்தையும், ஒழுக்கத்தையும் சிறு வயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக் கொண்டானானால், அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்."
>
> – தந்தை பெரியார்

**பெற்ற பிள்ளை கைவிட்டாலும் கற்ற கல்வி கைவிடாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தேன் கிட்டும். அதை விளக்க,

"உள்ள மலமூன்று மாய உகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல் வந்து – வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள்;
வாழ்த்தக் கருவும் கெடும்பிறவிக் காடு"

காட்டை அழிப்பது தீக்குப் பெருஞ்செயலா? பெரிய இருட்டை அழிப்பது விளக்கிற்கு முடியாத செயலா? அதைப்போலவே நம் அறியாமை நீங்க அறிவு வெளிப்படும். நம் அறிவு துலங்கத் துலங்க மெய்யுணர்வு வெளிப்படும். வெளிப்படவே, இன்பமும், துன்பமும், இரவும், பகலும், இருளும் ஒளியும், இளமையும் முதுமையும், வறுமையும் செல்வமும், பிறப்பும், இறப்பும் இம்மையும் மறுமையும் ஒன்றின் முடிவில் தோன்றும் ஒன்று என்று முரணானவையல்ல என்றும் எல்லாம் இறைவனின் பேரருள் என்றும் அறியலாம்.

எனவே நம் அறிவு விளக்கத்திற்குத் திருக்குறள் எப்படிப் பயன்படுகின்றதோ அதைப் போலவே நம் அன்பு விளக்கத்திற்குத் திருவாசகம் பயன்படுகின்றது.

விளக்கத்திற்குத் திருவாசகம் பயன்படுகின்றது.

### வி–பூதி

வி- மேலான, பூதி-ஐஸ்வர்யம்.
மேலான ஐஸ்வர்யத்தைத் தருவதால் விபூதி.
முக்திப்பேறுதான் மேலான ஐஸ்வர்யம்.

தமிழிற் சிறந்த நீதிகளை வழங்கி வண்மையிற் சிறந்த பெரியார் திருவள்ளுவரேயாவர். அவர்க்கு முன்னும் பின்னும் நீதிநூல் அருளிய ஆசிரியர்கள் வடமொழியிலும் தமிழிலும் பலர் இருந்தனர். எனினும் அன்னார் புகழொளியெல்லாம் வானத்து விளங்கும் மீன்களாக வள்ளுவர் சீர்த்தி அப்பான் மீன் நடுவண் பான்மதி போலத் திகழ்வதாகும். தம் தெள்ளிய கல்வியானும் ஒள்ளிய மதி நுட்பத்தானும் உலகியலையும் மக்கள் வழக்கவொழுக்கங்களையும் அழுந்தியறிந்து உள்ளத்தமைத்துத் 'திருக்குறள்' என்னும் நீதிக் களஞ்சியத்தை உலக முள்ளவும் நிலைபெற யாத்துதவிய பெருமையே அப்பொய்யில் புலவர் புகழொளி விஞ்சுதற்கு ஏதுவாயிற்று'.

– பண்டிதமணி கதிரேசனார்.

## வாழ்வு வளம் பெற

குடி மக்களுக்கு நலம் பயக்கும் காரியங்களையே செய்ய வேண்டும். நல்லோர் நினைக்கும் நலம் அனைத்தும் பெற வேண்டும். வறுமை ஒழிய வேண்டும். பிணிகள் நீங்க வேண்டும். பகையாலும் விலங்காலும் ஏற்படும் அச்சம் தவிர்க்க வேண்டும். நச்சரவம் கொடிய உயிர் அனைத்தும் ஒழிய வேண்டும். துன்பங்கள் மலிந்த கருணையில்லாதோர் ஆட்சி விரைவில் ஒழிய வேண்டும. அருள் நெறியில் ஆளுகின்ற நல்லரசு விளங்கவேண்டும். சன்மார்க்க அரசியலுக்கான அமைப்பு முறை இதுவே. எல்லாரும் நீதியுடனும், நேர்மையுடனும் வாழ வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர்களே - உங்களுக்கும் அதிக கடமை இருக்கிறது

வெற்றிகரமான பெற்றோராக இருப்பது அதிக வேலையை உட்படுத்தும் ஒன்று. இது அதிக தியாகங்களை உட்படுத்துகிறது. இதில் தங்களது பிள்ளைகளே பலியாகி விடக்கூடாது என்பதில் பாசமுள்ள பெற்றோர் கவனமாக இருக்க வேண்டும். "பெற்றோராயிருப்பது ஏதோ விருப்ப வேலையாக கருதப்படுகிறது" என்பதாக மக்லீன்ஸ் பத்திரிகை குறிப்பிடுகிறது. ஒரு விளையாட்டுப் பொம்மையைத் தூக்கி எறிந்து விடலாம். ஒரு விருப்ப வேலை செய்வதையும், வேண்டாம் என்றால் நிறுத்தி விடலாம். ஆனால் பெற்றோராக இருப்பது கடவுள் கொடுத்த பொறுப்பு.

உங்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த பரிசுகளைக் கொடுக்க ஆசைப்படுகிறீர்களா? ஒரு நல்ல பெற்றோராக இருப்பதே நீங்கள் அவர்களுக்கு கொடுக்கும் மிகச் சிறந்த பரிசு. குழந்தைப் பருவம் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க உங்கள் பிள்ளைகளுக்கு உதவுங்கள். இப்படிப்பட்ட பாதுகாப்பு, சமுதாயத்தில் உங்களுடைய குடும்ப அந்தஸ்தையோ பொருளாதாரத்தையோ சார்ந்ததாக இல்லை. உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள்தான் தேவை. அன்பையும் பாசத்தையும் பொழிந்து அவர்களைத் திக்குமுக்காடச் செய்யுங்கள். பிள்ளைகள் பயமுறுத்தப்படும்போது உங்கள் பேராதரவும், உங்கள் நேரமும் இன்றியமையாதவை. நீங்கள் அவர்களோடு பேசவும், கதைகளைச் சொல்லவும், ஒரு முன்மாதிரியாக இருக்கவும் வேண்டும் என்று பிள்ளைகள் விரும்புகின்றனர். தவறு செய்யும் போது கண்டிக்க வேண்டும் என்றும் எதிர் பார்க்கின்றனர்.

பாலியல் ஒழுக்கத்தைப் பற்றியது என்ன? பெற்றோர்களே, உங்களுடைய பிள்ளைகளின் மனதிற்கும் உடலுக்கும் மரியாதை கொடுக்கும் விதத்தில் உங்களுடைய குடும்ப உறவுகளை அளவுக்கு மீறாமல், வரம்புக்குள் வைத்துக் கொள்ளுங்கள். பெற்றோர்கள் பிள்ளைகளோடு கொண்டிருக்கும் ஒழுக்கத் தராதரங்களின் எல்லைகளைத் தாண்டும் நடவடிக்கைகள் எவை என்பதைப் பிள்ளைகள் எளிதாகப் புரிந்து கொள்வார்கள். வீட்டிலும் வெளியிலும் எவ்வாறு தங்களை நடத்திக்கொள்ள வேண்டும் என்பதாக அவர்களுக்கு போதிக்க வேண்டும். இதைச் செய்வதற்கு நீங்கள் தவறினால், மற்றவர்கள் இந்த வேலையைச் செய்துவிடுவார்கள். அதனால் ஏற்படும் விளைவுகள் உங்களுக்கு தலைவலியைத்தான் கொடுக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் சம்பந்தமாக அச்சுறுத்தப்பட்டால் எவ்வாறு பிரதிபலிக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொடுங்கள். இன உறுப்புகள் எதற்காக இருக்கின்றன என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளட்டும். அவற்றைத் தவறாக பயன்படுத்தக்கூடாது என்பதையும் கண்டிப்புடன் குறிப்பிடுங்கள். அவர்களிடத்தில் யாராவது தவறுதலாக நடந்துகொள்ள முயற்சித்தால் என்ன செய்யவேண்டும் என்பதையும் சொல்லிக்கொடுங்கள்.

எல்லாச் சமயங்களிலும் உங்கள் பிள்ளைகள் எங்கே? யாரோடு இருக்கிறார்கள்? என்பதைத் தெரிந்து வைத்திருங்கள். அவர்களுடைய நெருங்கிய நண்பர்கள் யாரென்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் இல்லாத சமயத்தில் அவர்களைக் கவனித்துக் கொள்வது யார்? அவ்வாறு கவனித்துக் கொள்பவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களா? எல்லா நபர்களையும் பெற்றோர்கள் சந்தேகக் கண்களோடு பார்க்கவேண்டும் என்பதை இது அர்த்தப்படுத்தாது. உங்கள் பிள்ளையோடு தொடர்பு கொள்ளும் எல்லா வயதுவந்தவர்களைப் பற்றியும் சரியாக மதிப்பீடு செய்யுங்கள். வெறுமனே ஆட்களின் வெளித்தோற்றத்தைப் பார்த்து ஏமாந்து விடாதீர்கள்.

-நன்றி....விழித்தெழு!

## கீதை வாக்கு

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ.
அது நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்? அது வீணாவதற்கு.
எது இன்று உன்னுடையதோ.
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ.
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ.
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் ஈழத்துச் சித்தர்

இராமச்சந்திரன் சுகன்யா (பாக்கிய மகாவித்தியாலயம், மாத்தளை)

சைவசித்தாந்த தத்துவத்தின் பிரகாரம் "முடிந்தமுடிபு" மும்பொருள் ஆகும். இவை பதி, பசு, பாசம் எனப்படும். சைவ சித்தாந்த தத்துவ ஆசிரியர்கள் தம் அநுபவ வாயிலாக இவற்றுக்கு வரைவிலக்கணம் வகுத்துள்ளார்கள். "அகர உயிர் போல் அறிவாகி எங்கும் நிகரில் இறைநிற்கும் நிறைந்து" என்பது பதி இலக்கணம். அதாவது பதி மனம், வாக்கு காயங்களுக்கு அப்பாற்பட்டது. இவ்வுண்மையை உணர்ந்த ஜீவன் முத்தர்களில் ஒருவகையாக சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நாற்பாதங்களிலும் இறைவனை வழிபடுவோரே சித்தர் எனப்பட்டனர். "சமயங்களுக்கப்பட்ட எவ்வித சடங்குகளுக்கோ சம்பிரதாயங்களுக்கோ கட்டுப்படாமலும், சாதிசமய பேதங்களைக் கடந்தவர்களாகவும் தவயோகிகளாகவும், மக்களுக்குப் பயன்படும் வகையில் மருத்துவம், சோதிடம், வானவியல் முதலிய



துறைகளில் ஈடுபட்டு அவற்றை துறைபோக கற்றுத் துருவி ஆராய்ந்து உலகிற்கு பல உண்மைகளை தந்தவர்கள்" என சைவசித்தாந்த

படகு நீரில் இருக்கலாம், ஆனால் நீர் படகுக்குள் நுழையலாகாது, அங்ஙனம் மனிதன் உலகில் வாழலாம், ஆனால் உலக ஆசை அவன் உள்ளத்தில் புகுந்து விடலாகாது.

—ராமகிருஷ்ணர்

தத்துவத்தின் பிரகாரம் "முடிந்த முடிபு" மும்பொருள் ஆகும். இவை பதி, பசு, பாசம் எனப்படும். சைவ சித்தாந்த தத்துவ ஆசிரியர்கள் தம் அநுபவ வாயிலாக இவற்றுக்கு வரைவிலக்கணம் வகுத்துள்ளார்கள். "அகர உயிர் போல் அறிவாகி எங்கும் நிகரில் இறைநிற்கும் நிறைந்து" என்பது பதி இலக்கணம். அதாவது பதி மனம், வாக்கு காயங்களுக்கு அப்பாற்பட்டது. இவ்வுண்மையை உணர்ந்த ஜீவன் முத்தர்களில் ஒருவகையாக சரியை, கிரியை, யோகம், ஞானம், எனும் நாற்பாதங்களிலும் இறைவன் வழிபடுவோரே சித்தர் எனப்பட்டவர். "சமயங்களுக்கப்பட்ட எவ்வித சடங்குகளுக்கோ சம்பிரதாயங்களுக்கோ கட்டுப்படாமலும், சாதிசமய பேதங்களைக் கடந்தவர்களாகவும் தவயோகிகளாகவும், மக்களுக்கு பயன்படும் வகையில் மருத்துவம், சோதிடம், வானவியல் முதலிய துறைகளில் ஈடுபட்டு அவற்றை துறைபோகக் கற்று, துருவி ஆராய்ந்து உலகிற்கு பல உண்மைகளை தந்தவர்கள்" என சித்தர் நெறியை எடுத்து உரைக்கின்றனர் சான்றோர்.

"சித்தர் சிவத்தைக் கண்டவர்" என்றும்

"பரமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்டு
இதமுற்ற பாச இருளை துறந்து
மதமற்றெனதியான் மாற்றி விட்டாங்கே
திதமுற்றவர்கள் சிவசித்தர் தாமே" என்றும் சித்தர் நெறியை எடுத்து உரைக்கின்றார் திருமூலர். மேலும் "எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா" என்றும் "ஞானகுருவின் முகவரி நாம் அளப்பது ஞாயிற்றை சங்கிலியால் அளப்பது போன்றது" என்றும் சித்தர் பெருமையைக் கூறுகின்றார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். இச்சித்தர் அணிமா முதல் வசித்துவம் வரையான எண்வகை சித்திகளையும் அறிந்தவராக காணப்பட்டவர்.

இவர்கள் வரிசையில் உலகளாவிய ரீதியில் பலரைக் குறிப்பிடலாம். பல்லவர் காலத்தில் தமிழ்நாட்டில் பதினெண் சித்தர் வாழ்ந்ததாக வரலாறு உண்டு. மச்சமுனி முதல் கோரக்கமுனி வரை குறிப்பிடத்தக்கவர்கள். இவ்வாறு இந்தியாவிலிருந்து வந்த கடையிற்சுவாமியினால் இலங்கையிலும் ஓர் சித்தர் பரம்பரை தோன்றியது. யோகர்சுவாமி, செல்லப்பாசுவாமி, சித்தானைக்குட்டிசுவாமி, குழந்தைவேல்சுவாமி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநாதசித்தர் என்போர் ஈழத்தில் வாழ்ந்துள்ளனர். இவர்களுள் ஒருவரான யோகர் சுவாமி பற்றியும் அவரது வாழ்வு பற்றியும் எடுத்து நோக்குவோம்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று" என்பது தெய்வப்புலவராம் திருவள்ளுவரின் வாக்காகும். உலகில் ஒன்று முதல் ஆறுவரை அறிவுடைய ஜீவராசிகள் தோன்றுகின்றன, வாழ்கின்றன, மறைகின்றன. ஜீவனுக்கு ஆறுதலை அளித்து யார் உடலை இம் மண்ணுக்கு விட்டு உயிரை ஆண்டவனின் பாதத்தாமரையில் அடைக்கலம் கொடுக்கின்றாரோ அவனே புகழாளன். உயிர் காத்தவன் ஆவான். இவ்வகையில் யோகர் சுவாமிச் உயிர் காத்த ஞானி. எனவே இவர் வள்ளுவரின் இலட்சியத்துக்கு இலக்கணமாக அமைந்தவர் ஆவார்.

வீரமொடு தவங்கள் கல்விமேன்மை எல்லாம் நிறையப் பெற்ற யாழ்ப்பாணத்தில் வரலாற்றுப் பிரசித்தி வாய்ந்த மாவிட்டபுரத்தில் ஆயிரத்துஎண்ணூற்று எழுபத்திரெண்டாம் ஆண்டு வைகாசி மாதம் இருபத்தொன்பதாம் நாள் சின்னாச்சி அம்பலவாணர் அம்மையார் தம்பதியாரின் புத்திரராக சதாசிவன் பிறந்தார்.



ஆம். இவரின் இயற்பெயர் சதாசிவன்.

சதாசிவன் சிறுவயதிலேயே தாயை இழந்தார். தந்தை மலேசியாவில் வியாபாரம் செய்து வந்தமையால், இவர் கொழும்புத்துறையில் வசித்த, கத்தோலிக்க மதத்திற்கு மாறி தன் பெயரையும் ஜோசப் என மாற்றிய, சிறிய தந்தை சின்னையாவுடன் வசித்துவந்தார். அங்கே சம்பத்திரிசியார் கல்லூரியில் இவரின் பெயர் "ஜோசப்" எனப்பதியப்பட்டு ஆரம்பக்கல்வியைக் கற்றார். கத்தோலிக்கர் பெருடன் கத்தோலிக்க பாடசாலையில் கத்தோலிக்க மதம் கற்றாலும் மாலை வேளையில் யாழ் கச்சேரிக் கருகில் வசித்த பரமனார் முத்துப்பிள்ளை வீட்டுக்குச் சென்று "மோகன்" எனும் பெயரால் அழைக்கப்பட்டு பரியாரிடம் சைவ சமயத்தை கற்றுவந்தார். ஆரம்பக் கல்வியை முடித்த சதாசிவனுக்கு மேற்படிப்பில் ஆர்வமின்றி தொழில் செய்யும் ஆர்வம் ஏற்பட்டது. இதனால் தந்தை இவரை தேயிலைத் தோட்ட வேலைக்கு அனுப்பினார்.

> மனதில் உறுதிவேண்டும்
> வாக்கில் இனிமை வேண்டும்
> நினைவில் நல்லது வேண்டும்
> —பாரதியார்

ஒரு முறை இவருக்கு சிவனொளிபாதம் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. அங்கே காணப்பட்ட இயற்கை அழகில் சுவாமி தன் மனதை பறிகொடுத்தார். அதன் பின் இயற்கையை இரசித்த இவர் தனக்குத்தானே கதைக்கத் தொடங்கினார். இதைக்கண்ட தந்தை இவரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தார். அங்கே கிளிநொச்சிப் பகுதியில் நீர்ப்பாசன திணைக்களத்தில் பொருட்காப்பாளராக பணிபுரியும் வாய்ப்பு சதாசிவனுக்கு ஏற்பட்டது. அதே நேரம் புராணங்கள் இதிகாசங்கள் முதலிய பல்விரு திருமுறைகளையும் கற்கும் வாய்ப்பும் இவருக்கு கிடைத்தது. இவற்றை கற்றதன் பயனாக இவருக்கு ஆன்மீக விடுதலையில் நாட்டம் ஏற்பட்டது. அதே நேரம் இவரின் தந்தையும் இறந்தார். இதனால் சதாசிவனுக்கு பற்றுக்கோடு ஒன்று தேவைப்பட்டது. இதன் பயனாக இவர் குருவை நாடி ஓடினார். "பார்வை என மக்களை முன்பற்றிப் பிடித்தற்காம் போர்வை" எனும் உமாபதி சிவாச்சாரியாரின் தத்துவத்துக்கிணங்க இவர் நல்லூர்த் தேரடியில் வீற்றிருந்த "விசர்ச்செல்லப்பா" என மக்களால் அழைக்கப்பட்ட செல்லப்பா சுவாமிகளை குருவாக கொண்டார்.

செல்லப்பா சுவாமிகளும் இவரின் ஆன்மீக வேட்கையைப் புரிந்து இவரைத்தன் சீடனாக ஏற்று தீட்சையும் அளித்தார்.

செல்லப்பா சுவாமிகளும் சதாசிவனும் கதிரவேலு சுவாமிகளும் ஒன்றாக திரிவர்; சண்டை போடுவர்; உணவு சமைப்பர். சமையல் முடியும் தறுவாயில் சட்டி பானைகளை உடைப்பர். இவ்வாறான இவர்களின் செயல்களைப் பார்த்த மக்கள் இவர்களை பைத்தியம் என்றதில் வியப்பில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை குருவின் வேண்டுகோளுக்கிணங்க சதாசிவன் நாற்பது நாட்கள் இரவுபகலாக நல்லூர்த் தேரடியில் நின்று இருந்தபடி பிச்சையேற்று உணவு உண்ணத் தொடங்கினார். இதனைக் கண்ட மக்கள் அதிசயித்து யோகர்சுவாமியே என அழைத்தனர்.

கொழும்புத்துறையார் சிற்றம்பலம் சம்பந்தர் என்பவரின் வளவில் பாதையோரத்தில் காணப்பட்ட இலுப்பைமர அடியே யோகரின் அருந்தவம் நடைபெறும் இடமாயிற்று. இதனைக்கண்ட அடியார் அதற்கருகிலிருந்த பழைய கடையைத் திருத்தியமைத்து குடிசையாக்கி யோகர் சுவாமிகளுக்கு கையளித்தனர். இதன்பின் சுவாமிகள் அங்கேயே நிரந்தரமாகத் தங்கினார். இவரைத் தேடி அங்கே அடியார் ஆன்மீக விடுதலை நாடியும் தம் துன்பதுயர் தீர்க்கவுமென வந்தனர். சுவாமிகள் சிலருடன் அன்பாகப் பேசுவார். சிலரை ஏசி விரட்டுவார். இதன் மூலம் அவர்களின் வினைகளை அகற்றிவிடுவார். இவர்கள் மறுநாளும் இவரைத் தேடி வருவார். சுவாமி அவர்களுக்கு ஏற்ற உபதேசங்களை வழங்கி அனுப்புவார். அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் முதலான அட்டமாசித்திகளும் இவர்களுக்கு துன்பந்துடைக்க



மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலன்களை நல்ல முறையில் தொழிற்படச் செய்வதே அறிவிற்கு உண்மையான வளர்ச்சி என்பது என் கருத்து.
—மகாத்மா காந்தி

உதவியதுடன் சுவாமிகளைச் சிலர் கேலி பேசவும் உதவிற்று.

அடியார் குழாம் சுவாமிகளின் உபதேசங்களை நாடெங்கும் பரப்ப விரும்பிற்று. மாத இதழ் வெளியிடுவதே பலரது எண்ணமாயிற்று. சுவாமிகள் இதையும் சிவதொண்டாகவே கருதியதால் "சிவதொண்டன்" என பெயரிட்டார். முதலாம் இதழ் ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்தைந்தாம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியாயிற்று. இதற்கான முதல் சிவதொண்டன் நிலையம் காங்கேசன்துறையில் ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்து மூன்றாம் ஆண்டில் தோன்றியது. பின்னர் செங்கலடியிலும் ஒன்று உதயமாயிற்று. இவர் அடியார் மூலமும் மாத இதழ் மூலமும் தன் உபதேசங்களை நாடெங்கும் பரப்பியது மட்டுமன்றி உலகெங்கும் தன்புகழை நிலைநாட்டினார். அமெரிக்காவில் வாழ்கின்ற சிவசுப்பிரமணிய சுவாமிகள் இவ்வாறான இவரது சீடர்களுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு! இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய பிரித்தானிய சோல்பரி பிரபுவின் மகனே இவரது சீடன் எனில் இவரது பெருமை சொல்லி முடியுமா?

இவர் புகழோடு தோன்றி புகழோடு வாழ்ந்து ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்தி நான்காம் ஆண்டு பங்குனி இருபத்திமூன்றாம் திகதி செவ்வாய் அதிகாலை ஆயிலிய நட்சத்திரத்தன்று "தன்னிலை மன்னுயிர்கள் சாரத் தருகின்ற" சக்தியோடு பின்னமிலாமல் இணைந்திருக்கின்ற இறைவனின் பாதத்திருவடியைப்பற்றிக் கொண்டார்.

ஆயினும் இவர் நிறுவிய சிவதொண்டன் நிலையமும் சிவதொண்டன் மாத இதழும் செல்லப்பா சுவாமிகள் இவருக்கு அருளிய "முழுவதும் உண்மை, ஒரு பொல்லாப்பும் இல்லை, நாம் அறியோம், எப்பவோ முடிந்த காரியம்" என்ற நான்கு மகாவாக்கியங்களை உணர்ந்து தன் சிந்தனையைத் துருவித்துருவி எழுதிய "நற்சிந்தனை" நூலும் இவரது சிந்தனையை மக்களிடையே அன்றுமுதல் இன்றுவரை பரப்பி வருகின்றன.

"கருமநெறியில் பிசகாதே! இறைவன் உள்ளும் புறமும் உள்ளவர்; எவ்வுயிரும் எம்பெருமான் திருமுன்னிலை என்று சாதனைசெய்; உனக்கு நான் தரக்கூடிய புதுசொல் எம்பெருமான் உன்னுள் என்றும் உள்ளான் எனும் உறுதிமொழியே" என்ற இவரின் உபதேசம் உலகில் வாழும் அத்தனை மக்களுக்கும் அளித்த நற்பிரசாதமே.

இவர் எமது தாய்நாட்டில் புகழோடு தோன்றி புகழோடு வாழ்ந்த அடியார் மனதில் இன்றும் இறவாப்புகழ் பெற்று வாழ்வது மறக்கவோ! மறுக்கவோ! மறைக்கவோ! முடியாத ஓர் கருத்தாகும்.

-சைவமகாசபை நடாத்திய கட்டுரைப்போட்டியில் பரிசு பெற்ற கட்டுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. மகிழ்ச்சியான மனிதனின் மேலாடை

– பேராசிரியர். எ. சோதி

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் திடீரெனக் கடும் நோய்வாய்ப்பட்டான்.

மருத்துவர்களால் அரசனின் நோய்க்கான காரணத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இருந்தாலும் அவனுக்கு மருந்து கொடுத்து வந்தார்கள்.

அரசனின் உடல் நிலையோ நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டே வந்தது. மருத்துவர்களுக்கும் என்ன செய்வது என்றே தெரியவில்லை. இச்செய்தியை அறிந்து நாடே சோகத்தில் மூழ்கியது.

அந்த நாட்டிற்கு முனிவர் ஒருவர் வந்தார். அரசனின் நோயைத் தீர்த்து வைப்பார் என்ற நம்பிக்கையில் எல்லோரும் அவரை அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர்.

முனிவரைக் கண்டதும் அரசன் படுக்கையை விட்டு எழுந்து வணக்கம் செய்ய முயன்றான். ஆனால் அவனால் முடியவில்லை.

அரசனின் நிலையைக் கண்ட முனிவர், அவனை அப்படியே படுத்திருக்குமாறு சைகை காட்டினார். அரசனின் கவலை தோய்ந்த முகத்தைப் பார்த்த முனிவர் அவன் உடலை நன்கு சோதனை செய்தார்.

"அரசே! உம்மைப் பீடித்துள்ள நோய் உடல் தொடர்பானது அன்று. உள்ளத் தொடர்பானது. இந்நோய் குணமாக எளிய மருந்து ஒன்று உள்ளது" என்றார் முனிவர்.

"என்ன மருந்து?" என்று மெல்லிய குரலில் கேட்டான் அரசன்.

அதற்கு முனிவர், "மகிழச்சியான மனிதன் ஒருவனின் மேலாடையை நீர் சில நாள் அணிந்து கொண்டால் உம் நோய் முழுமையும் குணமாகிவிடும்" என்று சொல்லி விடை பெற்றார்.

வீரர்களை அழைத்தான் அரசன். "இன்னும் ஒரு வாரத்திற்குள் மகிழ்ச்சியான மனிதன் ஒருவனைக் கண்டு பிடித்து அவன் மேலாடையைக் கொண்டுவர வேண்டும். இல்லையேல் உங்கள் உடலில் உயிர் தங்கி இருக்காது" என்று கட்டளையிட்டான்.

வீரர்கள் உடனே செயலில் இறங்கினர்.

ஒவ்வொரு பணக்காரனின் வீடாக நுழைந்து "நீர் உண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியாக இருக்கின்றீரா? " என்று கேட்டார்கள்.

"பணம் சேர்ப்பதற்கு எவ்வளவு துன்பப்படுகிறோம் தெரியுமா? அப்படி இருக்கையில் மகிழ்ச்சி எப்படி இருக்கும்? " என்றார் ஒருவர்.

"இரவில் பணப்பெட்டியின் பக்கத்திலேயே படுத்துக்கொள்கிறேன். இருந்தாலும் எப்பொழுது திருடன் வருவானோ? என்ற அச்சம் இருக்கிறது. இந்நிலையில் மகிழ்ச்சி வருமா? " என்றார் ஒருவர்.

இப்படியே ஒவ்வொருவரும் தாங்கள் மகிழ்ச்சியையே அறிந்ததில்லை என்று சொன்னார்கள். வீரர்களும் நாட்டில் உள்ள எல்லோரையும் விசாரித்து விட்டனர்.ஆனால் பயன் ஏதும் இல்லை.

நகருக்கு வெளியே இருந்த பெரிய ஆலமரத்தின் நிழலில் எல்லா வீரர்களும் கூடினார்கள். "அரசனிடம் சென்று மகிழ்ச்சியான மனிதனைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொல்லி உயிர் விடுவதா? அல்லது யாருக்கும் தெரியாமல் நாட்டை விட்டு வெளியேறி உயிர் பிழைப்பதா? என்ன செய்வது? என்று சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்..

அப்பொழுது அவர்கள் காதில் . "என்னைப்போன்ற மகிழ்ச்சியான மனிதன் உலகில் எவன் இருக்கிறான்? கடவுளே உமக்கு நன்றி " என்ற குரல் விழுந்தது.

இதைக்கேட்டு மகிழ்ச்சி அடைந்த வீரர்கள் சுற்றும் முற்றும் பார்த்தனர்.

சிறிது தொலைவில் ஒரு பிச்சைக்காரன் மகிழ்ச்சியாகப் புழுதியில் புரண்டபடி இருந்தான் . அவன் இடுப்பில் கோவணம் மட்டுமே அணிந்திருந்தான்.

வீரர்கள் அவனை நெருங்கி. "நீ உண்மையில் மகிழ்ச்சியாக இருக்கின்றாயா?" என்று கேட்டனர்.

"உங்களுக்கு அதில் என்ன சந்தேகம் . இன்று ஆண்டவன் அருளால் எனக்கு வயிறு நிரம்ப உணவு கிடைத்து விட்டது. எனக்கு எந்தக் கவலையும் இல்லை. நான் மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன " என்றான் பிச்சைக்காரன்.

"அப்படியா? உன் மேலாடையை எங்களுக்குக் கொடு.அதற்கு விலையாக நீ எவ்வளவு பணம் கேட்டாலும் தந்து விடுகிறோம் " என்றனர் வீரர்கள்.

"மேலாடையா? எனக்குச் சொந்தமாக இருப்பதெல்லாம் இந்தக் கோவணம் மட்டும் தான். வேறு துணியே என்னிடம் கிடையாது" என்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சைக்காரன்.

வீரர்களுக்கு இப்பொழுது என்ன செய்வது என்றே புரியவில்லை. நடப்பது நடக்கட்டும் என்ற துணிவுடன் அரண்மனைக்குத் திரும்பினார்கள்.

நடந்ததை எல்லாம் ஒன்றும் விடாமல் அரசனிடம் விளக்கமாக கூறினார்கள்.

எல்லாவற்றையும் கேட்ட அரசன் வீரர்களைத் தண்டிக்காமல் அவர்களுக்கு பரிசு கொடுத்து அனுப்பினான்.

சில நாட்களுக்குள் அவன் நோயும் தீர்ந்தது.

அரசன் குணம் அடைந்தது எப்படி?.

(மேற்படி கேள்விக்கான பதிலை கடைசிப் பக்கத்தில் பார்க்கவும்.)

## கடைசி வரம்.

கவிஞர் – சுப்பு ஆறுமுகம்.

"மனிதா! எதற்காக இப்ப கடுந்தவம் செய்கிறாய்? "

"என்ன வரம் வேண்டும "

"காணக் கண் கொடுத்தேன். பேச-வாய் கொடுத்தேன். கேட்கக் காது தந்தேன். நுகர மூக்குத் தந்தேன். சிந்திக்க அறிவு தந்தேன். வழங்க மனம் வழங்கினேன். இத்தனையும் போதாது என்று நீ -வாழ-நீடித்த ஆயுளையும் தந்திருக்கிறேன்! பிறகு புது வரம். என்ன வேண்டும். கேள்! "

"என் பேரைச் சொன்னாலே. உலக மக்கள் வியக்க வேண்டும். மதிக்க வேண்டும். கலங்க வேண்டும். கரம் கூப்பி வணங்க வேண்டும். இதுவரை உலகத்தில் யாரும். எப்பவும் ,எங்கேயும் வாங்காத புகழ்ச் சிகரத்தில் என்னை அமர்த்த வேண்டும்.! "

"அப்படியே!. தந்தேன்!. அடுத்து? "

"அடுத்து..........! பொருள் வேண்டும். எல்லாப் பணக்கார நாடுகள் கூட என்னிடம் கடன் வாங்கும் அளவுக்கு. நான் பணக்காரனாக வேண்டும். " சரி! தந்தேன்........ அப்புறம்......? "

" ஆரோக்கியம் வேண்டும் ! புகழ்., பொருள் இருந்தும். மருத்துவ சாலையில் கிடந்து லொக்கு லொக்கு என்று இருமிக் கொண்டு கிடக்கக் கூடாது."

"சரி! வயிரம் போல் உடல் தந்தேன். நோயே வராது போதுமா!"

"போதாது "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனிதா! இன்னுமா? வரம் ! என்ன அப்படி?!"

"அழகு வேண்டும். வயதும் ஏறிக்கொண்டேயிருக்க வேண்டும். நேர்த்தியான அழகு வரும் கட்டத்தில். அப்படியே வயது-வாலிபம்-நிலையாக உடலில் நின்று. விடவேண்டும்!"

"தந்தேன் - " என்றார். கடவுள் சிரித்துககொண்டே!.

"இன்னும்.....? "

"இன்னுமா ! என்ன? "

"நாரதனை விட நன்கு பாட வேண்டும். நடராசப் பெருமானை விட அற்புதமாக ஆட வேண்டும். கலைமகள் வாசிக்கும் வீணை, என்னைக் கண்டு ஆச்சரியப் பட வேண்டும். வேதம் என்ன வேதம் -அந்த நான்கினையும் முந்தியது என எண்ணும் வண்ணம் ஆதி வேதம் ஒன்று என்னால் எழுதப்பட வேண்டும்! எல்லாக் கலைகளிலும் மாமேதையாகி. எந்தக் கலைமேதையையும் மிஞ்சி நிற்க வேண்டும். "

"சரி தந்தேன்: இன்னும் கூட ஏதாவது கேட்க வரம் உண்டோ.....! "

"உண்டு.....! "

"என்ன.....? "

"எந்த அவைக்குச் சென்றாலும் , எனக்கெனத் தனி நாற்காலி போடப்படும் அளவுக்கு. ஒரு ராஜ கம்பீர நாடாளும் நாயகத் தோரணை எனக்கு வர வேண்டும்.! "

"பலே ! இதைத் தந்துவிட்டேன். வரட்டுமா? "

"இன்னும் ஒரே ஒரு வரம் தந்தால் போதும்? "

"என்னவோ! "

"கொஞ்ச நாளைக்கு " நான் **கடவுளாக** " இருக்க வேண்டும். உமது சிம்மாசனத்தைக் காலி செய்து தருகிறீரா? கடவுளே? " "அவ்வளவுதான்! "

சிம்மாசனத்தையும் காணோம்!

கடவுளையே காணோம்!

இருப்பாரா, இங்கே, இன்னும்!.

> **வாழ்க்கையில் வெற்றி பெறுவதே கல்வியின் நோக்கம் என்று கருதுவது தவறு. வாழ்க்கையை வளமடையச் செய்வதே கல்வியின் நோக்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் இருக்கிறான்

—மயிலூர் வாகரைவாணன்

"குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் இந்தக் கருத்தை நீங்கள் நிரூபித்துக்கொண்டிருக்கிறீங்க ........

என்றார் ஆசிரியர்.

கொஞ்சம் புத்திசாலித்தனமான மாணவன் குதித்தெழுந்தான்.

"சேர்..... இந்தக் கருத்தை யார் சொன்னாலும் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்."

"ஏன் ... நீர் டார்வினை விடப் பெரிய அறிஞரோ ....?"

"டார்வினும் ஒரு மனிதன் தானே சேர்"

ஆசிரியருக்கும் மாணவனுக்குமிடையில் வார்த்தைகள் இறுக்கமடைகின்றன.

ஆசிரியர் கண்டிப்பான குரலில் சொன்னார்

"சரி.. உன் மறுப்பைச் சொல் பார்ப்பம்."

மாணவன் நறுக்குத் தெறித்தாற் போல் சொன்னான்.

"எனக்கு ஒரு அண்ணன் இருக்கிறார். நானும் அவரும் உருவத்தில் ஒரே மாதிரி. வித்தியாசம் காண்பதே கஷ்டம். என்னைப் போல் அண்ணன் இருக்கிறதால் அண்ணனை என் தந்தை என்று யாரும் சொல்ல மாட்டார்கள்.........."

மாணவனின் இந்தப் பேச்சைக் கேட்டதும் வகுப்பில் சிரிப்பலை எழுந்தது.

மாணவன் தொடர்ந்தான்........

"நாங்கள் இருவரும் ஒரே விதமாக இருப்பதிலிருந்து ஒரு உண்மை தெரிகிறது. அதாவது எங்கள் இருவருக்கும் பொதுவாக எங்களைப் படைத்த ஒருவர் இருக்கிறார். அவர்தான் தந்தை......"

"இதைப் போல குரங்குக்கும் மனிதனுக்குமிடையேயுள்ள சில ஒற்றுமைகள் – அவைக்குப் பொதுவாக ஒருவர் இருக்கிறார் ...... அதாவது இறைவன் இருக்கிறார் என்பதைக் காட்டுது."

மாணவனின் நுட்பமான விளக்கத்தைக் கேட்ட ஆசிரியர் அவனை அன்பாகத் தட்டிக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னைப் போல் ஒருவன் இருக்கலாமா?

காகங்கள் இரண்டு அந்தக் கருங்குயிலைக் கொத்தித் துரத்திக் கொண்டிருந்தன. பாவம்........ அந்தச் சின்னப்பறவை பட்டபாடு...... இனத்துவேசம் என்பது இது தானோ?

காகங்களின் காட்டுமிராண்டித்தனத்தைக் கண்ட செண்பகத்திற்குக் கடுங்கோபம் வந்தது. அது ஆத்திரத்தோடு கேட்டது.

ஏன் அந்தப் பறவையை இம்சை செய்கிறீர்கள்?

காகங்கள் பட்டெனப் பதில் தந்தன. எங்களைப் போல் இன்னொன்று இருக்கக் கூடாது.

தன்னலம் மனிதர்க்கு மட்டுமல்ல. நமக்குந்தான் என்று சொன்னது செண்பகம்.

இது மட்டுமல்ல. இன்னுமொரு காரணம் இருக்கிறது என்றது. அது. என்ன?

ஒரு காகம் உரத்துக் கேட்டது. அது என்ன?

கா..கா..என்று உங்களைப் போல் தினமும் கரைந்து கொண்டிருக்காமல் இனிய குரலில் அது எடுப்பாகப் பாடுகிறது.

இதனாலும் உங்களுக்கு அதன் மீது ஏகப்பட்ட எரிச்சல்.....

செண்பகத்தின் பேச்சைக் கேட்ட காகங்கள் மௌனமாயின.

**மகிழ்ச்சியான மனிதனின் மேலாடை (பதில்)..........**

"கோவணம் கட்டிய பிச்சைக்காரனே மகிழ்ச்சியாக இருக்கும் போது, எல்லாச் செல்வமும் அதிகாரமும் உள்ள நான் கவலைப்படுவது ஏன்? எனச் சிந்தித்த அரசன் அன்று முதல் மகிழ்ச்சியாக இருக்க முயன்றான். கோபம் அவனை விட்டு நீங்கியது."

இச்சஞ்சிகை மாத்தளை சைவமகாசபையினருக்காக 129/25, ஜம்பட்டா வீதி, கொழும்பு – 13. இல் வசிக்கும் திரு. மாத்தளை கார்த்திகேசு என்பவரால் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர்

ஒருவனிடம் இருக்கும் ஊக்கமே அவனுடைய நிலையான உடைமையாகும்.

உலகம் எவ்வாறு நடைபெறுகின்றதோ உலகத்தோடு பொருந்தியவகையில் தானும் அவ்வாறு நடப்பதே அறிவாகும்.

ஒருவன் தன் மனத்தில் சினத்தை எண்ணாதிருப்பானால், நினைத்த நன்மைகள் எல்லாம் அவன் ஒருங்கே பெறுவான்.

அறிவுடையார் எதிர்காலத்தில் நிகழப்போவதை முன்னமே அறியவல்லவர். அறிவில்லாதவர் அதனை அறிய முடியாதவர்களாவார்கள்.

பொருள் வரும் வழி சிறிதாக இருந்தாலும் போகும் வழி விரிவுபடாவிட்டால் அதனால் தீங்கு இல்லை.

அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமையாகும். அஞ்சத்தக்கதைக்கண்டு அஞ்சுவது அறிவுடையவயரின் தொழிலாகும்.

பொருள் இல்லாதவரை எல்லோரும் இகழ்வர், செல்வரை எல்லோரும் சிறப்பு செய்வர்.

இது செய்வதற்கு அருமையானது என்று சோர்வுறாமல் இருக்க வேண்டும். அதைச் செய்வதற்கு தக்க பெருமையை முயற்சி உண்டாக்கும்.

அன்பு மிகுதியால் பழகுவார் போல் தோன்றினாலும் நற்பண்பு இல்லாதவரின் நட்பு வளர்ந்து பெருகுவதைவிட தேய்ந்து குறைவது நல்லது.

மனத்தில் உடன்பாடு இல்லாதவருடன் கூடிவாழும் வாழ்க்கை ஒரு குடிசையில் பாம்போடு வெட்டுகின்றவரின் கையையே அது வருத்தும்.

வாளைப் போல் வெளிப்படையான பகைவர்க்கு அஞ்சவேண்டியதில்லை. ஆனால் உறவினரைப் போல இருந்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்சவேண்டும்.

சூதாடுதலை ஒருவன் மேற்கொண்டால் புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகிய ஐந்தும் அவனைச் சேராமல் ஒதுங்கும்.

இரப்பவன் எவரிடத்திலும் சினம் கொள்ளாதிருக்க வேண்டும். அவன் அடைந்துள்ள வறுமைத்துன்பமே அவனுக்கு அறிவுபுகட்டும் சான்றாக அமையும்.

நீதிமுறை செய்து குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன் மக்களுக்குத் தலைவன் என்று தனியே கருதி மதிக்கப்படுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவக்கதிர் தளைத்தோங்க
வாழ்த்துக்கள்.

# SHARMILA TRADERS

General Merchants, Commission Agents,
Importers & Exporters.

No. 1A, Old Moor Street, Colombo-12.
T.P : 434825

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்குறளை கற்றவன் மனிதன் ஆவான்.
திருக்குறளை அறிந்தவன் அறிஞன் ஆவான்.
திருக்குறளின் படி நடப்பவனோ தெய்வம் ஆவான்.
திருக்குறளை நாளும் படி.
திருக்குறளே நம் மறை நெறி.


ஸ்டூடியோ வளர்மதி கங்காஸ்

34, ராஜ வீதி, மாத்தளை.

தொலைபேசி : 066–30038



PRINTED BY : UNI LANKA'S
32, ST. ANTHONY'S MAWATHA, COLOMBO-13. 074-614438



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org